இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

ELITERADIO Since 1959

facebook.com/kdksrilanka | shop.eliteradio.com


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


BEAT THE HEAT The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74



மலர் : 04, இதழ்: 21 சோபகிருது வருடம், ஆடி மாதம் 04ஆம் திகதி வியாழக்கிழமை
(20.07.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 01, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50


## பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13ஆவது திருத்தமா?

# ரணிலின் கூற்றை நிராகரித்தது தமிழ்க் கூட்டமைப்பு!



நமது நிருபர்

பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரித்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் அதிகாரப் பகிர்வுக்கான முன்மொழிவை மற்றுமொரு வெற்று வாக்குறுதி என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தயாரில்லை என்றால், 13க்கு அப்பால் செல்வதற்கு இலங்கை அரசுக்கு அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பதுதான் அர்த்தம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையேயான சந்திப்பின் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர் தரப்புடன் ஜனாதிபதி ரணில் கடந்த டிசம்பரில் பேச்சை ஆரம்பித்தபோது பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பேசினார். பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் 13 பேர் அதாவது டீ.ஐ.ஜி. ரேஞ்ஜ் 13 ஐ விட குறைத்து அதனை 9ஆக கொண்டுவருவது பற்றியெல்லாம் பேசினார். அதன்பின்னர் நடந்த கூட்டங்களிலெல்லாம் இதுபற்றிப் பேசப்பட்டது.

இப்போது திடீரென ஜனாதிபதி வேறுவிதமாக பேசுகிறார். எங்களது நிலைப்பாட்டை அவ்வாறு மாற்றிக் கொள்ள முடியாது.

தமிழர் பிரச்சினை தீர்வில் நாங்கள் நியாயமாக இல்லாத எந்த விடயத்திலும் சமரசம் செய்துகொள்ள மாட்டோம்.

எங்களது நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்- என்றார் சுமந்திரன். எம்.பி.

## பக்கவாத மருந்துகளுக்கு யாழில் தட்டுப்பாடு

யாழ். செய்தியாளர்

வடக்கில் பக்கவாதத்துக்குரிய மருந்துகள் தட்டுப்பாடு காணப்படுகின்றமை ஒரு துர்ப்பாக்கிய நிலை என நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (19) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பக்கவாதம் ஏற்பட்ட நோயாளர்களை நான்கரை... 02 பக்கம்

## வடக்கில் அதிகரித்துள்ள நரம்பியல் நோய்த் தாக்கம்

### மது பாவனையின் அதிகரிப்பே காரணமென வைத்தியர் அஜந்தா சுட்டிக்காட்டு



யாழ். செய்தியாளர்

வட மாகாணத்தில் அதிகரித்த மது பாவனையின் காரணமாக நரம்பியல் சார் நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (19) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 02 பக்கம்

## பெருந்தோட்டத் துறைக்கென சபையில் முழுநாள் விவாதம்

நமது நிருபர்

மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் நேற்று (19) இணக்கம் வெளியிட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பியதுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் சபையில் விவாதம் ஒன்று அவசியம் என வலியுறுத்தினார்.

இதனையடுத்து, அந்த விடயம் தொடர்பில் முழுநாள் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ஒரேயொரு சீட்டில வந்து ஜனாதிபதியாகியே இப்படியெண்டா, மக்கள் பெரும்பான்மையா வாக்களிச்சு வந்திருந்தா ரணிலை கையில பிடிச்சிருக்கேலாது பாருங்கோ..!

## உறுதியான பதில் கிடைக்கவில்லை

### ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து சி.வி. கருத்து



நா.தினுஷா

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்தாலும், அந்த வாக்குறுதிக்கு ஏற்ற செயற்பாடுகளை அவதானிக்கக் கூடியதாக இல்லை. ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்தது என்று கூற முடியாது. அநேகமான விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தாலும் அரசாங்கத்திடம் நாங்கள் எதிர்பார்க்கும் விடயங்களுக்கு உறுதியான பதில்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்கினேஷ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின்... 02 பக்கம்

## ஏழு மாதங்களில் 10,000 விபத்துகள்

### 1,200 பேர் பலி

கே. சுபானி





நடப்பாண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 10ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 10ஆயிரத்துக்கும் அதிகமான வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவ்விபத்துகளில் ஆயிரத்து 202 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், விசேட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பத்தாயிரத்துக்கும் அதிகமான வாகன விபத்துகளில்... 02 பக்கம்

## பேராசை அரசியலுக்கு முன்னிற்கும் தலைவர்கள் குறித்து சிந்தியுங்கள்!

### மலையகம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் உணர்வுபூர்வ பேச்சு



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தரப்பினர் உண்மையாகவே தமது உரிமைகளுக்காகவா அல்லது தமது பேராசை கொண்ட அரசியலுக்காகவா முன்நிற்கிறார்கள் என்பதை தோட்ட மக்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (19) தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானபோது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பல்வேறு... 02 பக்கம்

## ரணில் இன்று இந்தியாவுக்கு பயணம்



02 பக்கம்

## சஜித்துடனான இணைவு தீர்க்கதரிசனமான நோக்கு

### பாராட்டி பெருமிதமடைகிறார் மனோ



மக்களின் விடிவுக்கு நிரந்தரத் தீர்வுகளான காணி, வீடு, கல்வி உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் இயங்கி வருவதாக தெரிவித்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன் இணைந்துள்ளமை தீர்க்கதரிசனமான நோக்கு என்பதை பொறுப்புடன் கூறுவதாக குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

## சாணக்கியன் வெளிநடப்பு



நா. தினுஷா

ஊழல் எதிர்ப்புக்கான பாராளுமன்றக் குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தலைமையில் நேற்று முன்தினம் (18) கூடியது. இந்த குழுக் கூட்டத்தை எதிர்க்கட்சி புறக்கணித்திருந்ததுடன் குழு உறுப்பினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. இராசமாணிக்கம் சாணக்கியன் வெளிநடப்பு செய்திருந்தார்.

ஊழல் ஒழிப்புக் குழுவின் தலைவர் பதவி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினருக்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிர்க்கட்சியினர் இந்தக் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

இந்நிலையில், பாராளுமன்ற குழுவின் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு எதிர்த்தரப்பினர்... 02 பக்கம்

## உஷ்



கோட்டா கோ கம போராட்டத்தை குழப்பப் போய் அடிவாங்கி பிரபலமான மஹிந்த கஹந்தகம சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் மஹிந்தவை சந்திக்கச் சென்று செம டோஸ் வாங்கிக்கட்டிக்கொண்டாராம்.

எந்த முன்னறிவித்தலுமின்றி மஹிந்தவின் இல்லத்துக்கு சென்று பாதுகாவலர்களுடன் முரண்பட்டு இறுதியாக மஹிந்தவை சந்திக்கச் சென்றாலும் அவரை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதாம்.

கோட்டா அரசின் காலத்தில் எல்லா காவாலி வேலைகளையும் செய்துவிட்டு இப்போது அதே வேலைகளை தொடரவா வந்தீர்? என்று கேட்டு இந்த ஏரியாவில் நிற்கவேண்டாமென கூறி விரட்டிவிட்டாராம் மஹிந்த.

## அதிகாரப் பகிர்வுக்கு ஒருபோதும் இடமளியோம்

### சரத் வீரசேகர மீண்டும் திட்டவட்டம்



நா. தினுஷா

அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதற்கான நேரம் இதுவல்ல. நாட்டை ஐக்கியப்படுத்தல் என்பதன் பொருள் நாட்டை பிரிப்பதாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியில்லை. ஆகவே, அவர்களின் தேவைக்காக அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று பாராளுமன்ற உறுப்பினர்... 02 பக்கம்

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றம்

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நேற்று (19) நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்தின் குழுநிலையின் போது அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட ஒரு சில திருத்தங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் 2023 ஏப்ரல் 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம், ஜூன் 21 மற்றும் ஜூலை 06 ஆகிய இரு தினங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ரணில் இன்று...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (20) இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

ஜனாதிபதி இன்றும் (20) நாளையும் (21) இந்தியாவில் தங்கியிருந்து பல்வேறு தரப்புகளுடன் பேச்சுவார்த்தை முன்னெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு நாடுகளும் கொன்சியூலர் உறவுகளை ஸ்தாபித்து, 75ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் சந்தர்ப்பத்தில் இந்த விஜயம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய ஜனாதிபதி ஸ்ரீமதி திரௌபதி முர்முவை சந்திக்கவுள்ளதுடன் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஏனைய இந்திய உயர் அதிகாரிகளுடன் பரஸ்பர நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ளார்.

மேலும், நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் பிரச்சினைகள், குறிப்பாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அமுலாக்கப் பணிகள், வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள அரசியல் பிரச்சினைகள் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதிகாரப் பகிர்வுக்கு...

ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நேற்று (19) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பது இந்தியாவினால் எமது நாட்டின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டவொன்றாகும். எமது சிறிய நாட்டை சமஷ்டி மயப்படுத்த நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இந்த நாடு முழுமையாக சமஷ்டி மயமாவதை தடுப்பதற்காக ஜே.ஆர்.ஜெயவர்தன அரசியலமைப்பினூடாக சில தடைகளையும் விதித்திருந்தார்.

அதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவைக்காக அதனை செய்ய இடமளிக்க மாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியும் இல்லை. அவர்களுக்கு 35 சதவீதம் கூட தமிழ் மக்களிடமிருந்து வாக்கு கிடைக்காது. 22 தேர்தல் மாவட்டங்களில் 05 மாவட்டங்களிலேயே தேர்தலுக்கு போட்டியிடுகிறார்கள். ஏனைய மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் இல்லை என்றால் அவர்களின் அறிவிப்புகளும் கோரிக்கைகளும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கோரிக்கைகளாக அமையாது. அதனால், எப்போதும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பையே தெரிவிப்பேன். நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அதிகாரப்பகிர்வு குறித்து பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருளாதார நெருக்கடிக்கே தற்போது தீர்வு வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதற்கான அவசியம் தற்போது இல்லை.

பொலிஸ் அதிகாரத்தை தனியாக மாகாணங்களுக்கு வழங்குவது என்பது நகைப்புக்குரிய விடயமாகும். ஐக்கிய நாட்டை பிரிப்பதற்கு இடமளிக்க மாட்டோம். ஒற்றையாட்சியை விட்டுக்கொடுக்கவும் மாட்டோம். நிலப்பரப்பில் பெரிய நாடுகளே ஐக்கியப்படுத்தப்படும். இந்த சிறிய நாட்டை ஐக்கியப்படுத்துவது என்பதன் பொருள் நாட்டை பிரிப்பதாகும். அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம் என்றார்.

## பக்கவாத மருந்துகளுக்கு...

மணித்தியாலத்துக்குள் அந்த சிகிச்சை வழங்கக்கூடிய ஒரு வைத்தியசாலைக்கு, அதாவது நரம்பியல் சிகிச்சை குழாம் உள்ள வைத்தியசாலைக்கு நேரடியாக எடுத்துச் செல்வதன் மூலம் உடனடியாக உரிய பரிசோதனை மேற்கொண்டு மூளையில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

முக்கியமான ஒரு விடயத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன், 85 வீதமான பக்கவாதம் ஏற்படுவதற்கு காரணம் மூளையில் ஏற்படுகின்ற இரத்த அடைப்பு ஆகும். எனவே இந்த பக்கவாதத்தை குணப்படுத்துவதற்குரிய மருந்துகள் தற்பொழுது உலகளாவிய ரீதியில் வழங்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையிலும் இது சம்பந்தமான மருந்து சிகிச்சை முறைகள் தற்பொழுது மக்களுக்காக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதிலே தற்பொழுது துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்பொழுது உள்ள பொருளாதார இன்னல் காரணமாக இதற்குரிய மருந்துகளுக்கு சற்று தட்டுப்பாட்டு நிலை காணப்படுகின்றது.

ஆகவே, இந்த தட்டுப்பாடுகளை நாங்கள் கருத்தில் கொள்ளாமல் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சையினை நாங்கள் வழங்குகின்றோம். அதேபோல அவர்களுக்குரிய ஏனைய மருந்து பொருட்களும் இங்கே சேமிப்பில் வைத்திருக்கின்றோம். எனினும் தற்போது இந்த பக்கவாதத்துக்குரிய மருந்து தட்டுப்பாடானது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏழு மாதங்களில்...

உயிராபத்துகளுடன் கூடிய ஆயிரத்து 135 விபத்துகளும் 2ஆயிரத்து 88 பாரிய விபத்துகளும் சிறுகாயங்களுடன்கூடிய 4 ஆயிரத்து 450 விபத்துகளும் இடம்பெற்றுள்ளன.

வாகன சாரதிகளின் கவனயீனம் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டால் கடந்த வருடம் 21 ஆயிரத்து 953 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் சாரதிகள் விஷ போதைப்பொருளை பயன்படுத்தி வாகனம் செலுத்துகின்றனரா என்பது குறித்து நாடுபூராகவும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 62 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பஸ் சாரதிகள் 19 பேரும் 24 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும் உள்ளடங்குகின்றனர்.

வாகன சாரதிகள் போதைப்பொருளுக்கு மேலதிகமாக விஷ போதைப்பொருளை பயன்படுத்தியுள்ளனரா என்பது குறித்து சோதனைக்குட்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். விஷ போதைப் பொருளை பயன்படுத்தி வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான கருவிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதனையும் மீறி வீதி விபத்துகளால் உயிரிழப்புகள் சம்பவிக்கின்றபோது குறித்த வாகன சாரதி விஷ போதைப்பொருளை பயன்படுத்தியுள்ளாரா என்பதை அறிவதற்கு வைத்திய பரிசோதனைக்குட்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சஜித்துடனான இணைவு...

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு (19) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நுவரெலியா முதல் கொழும்பு, அவிசாவளை வரை நாடெங்கும் பரந்து வாழும், பெருந்தோட்ட மக்களுக்கு வீடு கட்டி வாழவும் பயிர்ச்செய்கை வாழ்வாதாரத்துக்கும் காணி வழங்கி, அவர்களை சிறுதோட்ட உரிமையாளராக்கும் எமது கொள்கையை சஜித் பிரேமதாச ஏற்றுக்கொண்டுள்ளார். அதேபோல், கொழும்பு மாநகரில் சொந்த வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்கு தொடர்மனைகளை கட்டி சொந்தவீடுகள் வழங்கவும் சஜித் பிரேமதாச எம்முடன் ஒரு கட்சியாக, தேசியக் கூட்டணியாக உடன்பாடு கண்டுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணியில், பிரதான பங்காளிக் கட்சியாக அங்கம் வகிக்க பிரதான காரணங்களில் இது ஒன்றாகும். எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச, இவை தொடர்பில் எமக்கு எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் உறுதிகள் அளித்துள்ளார். பகிரங்கமாக மேடைகளில் கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் அதை இன்று (நேற்று) மீண்டும் கூறி உறுதி செய்தார்.

மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென், வயம்ப ஆகிய 06 மாகாணங்களின் பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு (அவிசாவளை), களுத்துறை, குருநாகல், காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 102 பிரதேச செயலக பிரிவுகளில் பெருந்தோட்டத்துறை அமைந்துள்ளது. எங்கெல்லாம் எம்மவர் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் காணி உரிமையும் வீட்டு உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல், தொழில், பொருளாதாரம், வாழ்வாதாரம் ஆகிய காரணங்களை தேடி பெருந்தொகையான நமது மக்கள் மலைநாட்டு பிரதேசங்களில் இருந்தும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இருந்தும் தேசிய தலைநகரம் கொழும்பு மாநகரில் வந்தும் குடியேறுகிறார்கள். இங்கேயே பிறந்து வளர்ந்து வாழும் மக்களும் இருக்கின்றார்கள். அனைவருக்கும் கல்வி, வீடு, வாழ்வாதார உரிமைகளை உறுதி செய்து, பாதுகாப்பு அளிக்க நான் இங்கே இருக்கிறேன்.

ரணிலும் சஜித்தும் இணைந்தால் நல்லது என மக்கள் விரும்புகிறார்கள். நாமும் விரும்புகிறோம். ஆனால், அது எமது கைகளில் மாத்திரம் இல்லை. பல புற சக்திகள் அதற்கு தடையாக இருக்கின்றன. அதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

எமது பிரதான நோக்கு, எமது மக்களின் விடிவுக்கு நிரந்தரத் தீர்வுகளான காணி உரிமையும் வீட்டு உரிமையும் கல்வி உரிமையும் உறுதிப்படுத்தப்படுவதாகும். கல்வி உரிமைக்கு இந்திய அரசு உதவும் என நான் நம்புகிறேன். காணி உரிமையை, நாம் இலங்கையில் பெறுவோம். இவற்றை எப்படி பெறுவது என்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்க்கதரிசனத்துடன் நடக்கின்றது. நாம் நினைத்தால், உடன் அரசில் இணைந்து அமைச்சு பதவிகளை பெறலாம். ஆனால் அதைவிட இதுவே எமது நிதானமான தீர்க்கதரிசன நோக்கு என்பதை நான் பொறுப்புடன் கட்சி தலைவராக கூறி வைக்க விரும்புகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உறுதியான பதில்...

கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச்சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் போன்றவை தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி விளக்கமளித்திருந்தார். இருந்தபோதும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் ஒன்றிணைந்து அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசியிருந்தோம். அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம் குறித்தும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அதிகாரப் பகிர்வுக்காக மேற்கொள்வதற்கான சட்டத்திருத்தங்கள் குறித்தும் பேசியிருந்தோம். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திலுள்ள சட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்காக புதிதாக கொண்டுவரப்பட வேண்டிய சட்டத்திருத்தங்களையும் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

எங்களின் பரிந்துரைகளை அடுத்த கலந்துரையாடலுக்கு முன்னர் நிறைவேற்றுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்த மாத இறுதிக்குள் அந்த சட்டத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

இந்த கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்ததா என்பதை குறிப்பிட முடியாது. அநேகமான விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தாலும் அரசாங்கத்திடம் நாங்கள் எதிர்பார்க்கும் விடயங்களுக்கு உறுதியான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. இருந்தபோதும், பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். இதற்கு முன்னரும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தாலும் அதனால் எந்த பலனும் கிடைக்கவில்லை. கலந்துரையாடல்களின் மூலம் ஏதாவதொரு வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று தெரிவித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருக்கிறோம். 2018ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. அதனால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இந்தியாவே கொண்டுவந்தது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இந்தியாவே குரல்கொடுத்தது. எனவே, இந்த அரசியலமைப்பு திருத்தத்தினூடாக பெற்றுக்கொடுப்பதாக இந்தியா வாக்குறுதி வழங்கிய விடயங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பி வைத்திருக்கிறோம்.

இதுதொடர்பில் அரசாங்கத்திடமிருந்து எந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. ஜனாதிபதிக்கு தீர்வு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தாலும், தொடர்ச்சியாக காலந்தாழ்த்தி வருகிறார்கள். தற்போதுவரையில், ஐந்து கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன. புதிதாக ஒருசில சட்டமூலங்களை சபையில் முன்வைப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அவற்றினூடாக மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்க முயற்சிப்பதாக தெரிவிக்கிறார்கள். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதாக தெரியவில்லை என்றார்.

## பேராசை அரசியலுக்கு...

கேள்விகளை முன்வைத்துப் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரத்துக்காக தங்கள் பெரும் உழைப்பையும் முயற்சிகளையும் தியாகம் செய்தாலும் கடினமான வாழ்க்கையை நடத்துபவர்களாக பெருந்தோட்ட சமூகத்தை அழைக்கலாம் என்றும் தோட்ட மக்களை மாற்றாந்தாய் போல் கவனித்து தோட்ட மக்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்ற இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

நாட்டிலுள்ள தரிசு நிலங்களை பெருந்தோட்ட சமூகத்துக்கு வழங்கி, அவர்களை சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக உருவாக்கி, லயன் அறைக்கு விடைகொடுத்து சொந்த நிலத்தில் வீடொன்றை தயார்படுத்திக் கொடுப்பதே ஐக்கிய மக்கள் சக்தியினது நோக்கமாகும்.

தோட்ட மக்கள் ஒவ்வொரு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளைப் பின்தொடர்ந்து மானியம் கோரி செல்லும் அடிமைப் பயணத்தை தடுத்து நிறுத்தி சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக உருவாக்கி, தேயிலை உற்பத்தியில் ஈடுபாட்டுடன் பங்களிக்கும் வகையில் முன்னேற்றத்தை வலுப்படுத்த உத்தேசித்துள்ளோம். இந்த முன்னேற்றங்களை மேம்படுத்துவதன்மூலம் ஒருவர் தனது உழைப்பை தியாகம் செய்து உயர்ந்த வாழ்க்கை முறையை அடைய முடியும். அப்பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தித் தர முடியும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு கூட தோட்ட மக்களின் சேமலாப வைப்பு நிதியில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் பெருந்தோட்ட மக்களின் விடிவு பற்றி பேசி அவர்களிடமிருந்தே வாக்குகளைப் பெற்ற அமைச்சர்கள் சிலர், இந்த தேசிய கடன் மறுசீரமைப்புக்கு சார்பாக வாக்களித்தனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தரப்பினர் உண்மையாகவே தமது உரிமைகளுக்காக முன்நிற்கின்றார்களா அல்லது தமது பேராசை கொண்ட அரசியலுக்காக முன்நிற்கின்றார்களா என்பதை தோட்ட மக்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (19) பாராளுமன்றத்தில் கேள்விகளை முன்வைத்தார்.

பல வருடங்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டுக்கு பெருமளவிலான அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதற்கு தமது உழைப்பை வழங்கியுள்ளனர். எனினும், இன்றும் இத்தோட்ட மக்கள் மிகவும் குறைந்த வசதிகளிலேயே தமது வாழ்வை நடத்தி வருகின்றனர். தோட்டப் பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலைகளில் வசதிகள் மிகக் குறைவு. மிகவும் கடினமான பாதைகள் வழியாகத்தான் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. முறையான போக்குவரத்து வசதி இல்லாததால், பிள்ளைகள் நீண்ட நேரம் வீதியோரங்களில் நிற்க வேண்டியுள்ளது.

மிகவும் மோசமான வசதிகளின் கீழே பலர் லயன் அறைகளில் இன்னும் வாழ்கின்றனர். எனவே, இந்தத் தோட்டச் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும். தோட்ட மக்களை வறுமையில் இருந்து விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் பிரகாரம், இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

01.மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட ரூ.1,000 கொடுப்பனவுத் தொகையை எந்த தோட்டக் கம்பனிகள் வழங்குவதில்லை என்பதை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா? அவ்வாறெனில் அவை யாவை? அரசாங்கம் முன்வைத்த கொடுப்பனவை வழங்காமைக்கு தோட்ட நிறுவனங்கள் கூறும் காரணங்கள் என்ன? இது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

02.தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக அரச, தனியார் மற்றும் இணைந்த தோட்டக் கம்பனிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்குச் செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை எவ்வளவு? இவ்வாறு நிலுவையில் உள்ள நிதியை செலுத்த வேண்டிய நிறுவனங்கள் எவை? அந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு நிலுவைத் தொகையை செலுத்த வேண்டியுள்ளது என்பதை தனித்தனியாக வழங்க முடியுமா? முடியாவிட்டால் ஏன் முடியாது?

03. நுவரெலியா, பதுளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 60 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறையை (Smart Class Room) நிறுவும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பாராளுமன்றத்தில் கருத்துகளை முன்வைத்திருந்தார். இந்தத் திட்டத்துக்கு இந்திய உதவி எவ்வளவு தொகை கிடைத்தது? இம்மாவட்டங்களில் எந்தெந்த பாடசாலைகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்பது கண்டறியப்பட்டுள்ளதா? அவ்வாறெனில் அவை யாவை? அதன் தற்போதைய முன்னேற்றம் யாது? இந்த திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்றால், எப்போது ஆரம்பிப்பது என்று எதிர்பார்க்கப்படுகிறது? இத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த பெருந்தோட்டத்துறையில் பிள்ளைகள் கல்வி கற்கும் ஏனைய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

04. இந்த ஆண்டு தோட்ட மக்களுக்காக 3,225 வீடுகள் இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு இந்திய உதவி எவ்வளவு தொகை கிடைத்தது? இதுவரை எத்தனை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன? அந்த வீடுகள் தற்போது தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறு வழங்கப்படவில்லை என்றால், பெருந்தோட்ட மக்களுக்கு எப்போது இந்த வீடுகளை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது? இதற்கு மேலதிகமாக, தோட்ட மக்களின் வீட்டுக் கனவை நனவாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

05. இந்திய அரசின் ஆதரவுடன் மலையகத் தமிழர்களுக்கான அரச பல்கலைக்கழகம், தாதியர் பயிற்சி நிறுவனம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM Subjects) ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி முன்மொழிந்திருந்தது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படுமா?

06. பெருந்தோட்டங்கள் தொடர்பில் தற்போது எந்தெந்த காணிகள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படவில்லை என்பதை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா? அடையாளம் கண்டுள்ளது என்றால், ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு இடம் உள்ளது? இந்த இடங்களில் எவ்வளவு நிலம் தோட்ட மக்களுக்கு மீள் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளது? அவை வெற்றிகரமாக பயிரிடப்படுவதை அரசாங்கம் கன்காணித்துள்ளதா? தொடர்ந்து விவசாயம் செய்யாத தோட்டங்களை பயிர்ச்செய்கைகளுக்காக பெருந்தோட்ட மக்களுக்கு கொடுத்து வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

07. 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர், நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, அவிசாவளை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தோட்டப் பகுதிகளை அண்டி எத்தனை மதுபானக் கடைகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன? இவ்வாறு அனுமதி வழங்குவதில் உரிய அளவுகோல்கள் உரியவாறு பின்பற்றப்பட்டுள்ளதா? அவ்வாறு பின்பற்றப்படவில்லை என்றால், ஏன் பின்பற்றப்படவில்லை? என அவர் கேள்வி எழுப்பினார்.

## சாணக்கியன் வெளிநடப்பு...

இருக்கவேண்டியது கட்டாயம் இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றினால் போதுமானதாக இருக்குமென்றும் குழுவின் தலைவர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஊழல் எதிர்ப்புக்குழு இன்று (நேற்று முன்தினம்) ஒன்றுகூடியிருந்தது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவுக்கு வருகைதரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மாத்திரம் வருகைத் தந்திருந்தார். அவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதியொருவரும் இந்தக் குழுவில் தலைமைத்துவம் வகிப்பதற்கு தான் இணங்கப் போவதில்லை என்று தெரிவித்து அங்கிருந்து எழும்பிச் சென்றுவிட்டார். இதற்கு முன்னரே திட்டமிட்டு இதனை செய்திருக்கிறார்கள்.

பாராளுமன்ற வரலாற்றில் ஒருபோதும் குழுக்கள் அரசாங்கத்துக்கு அப்பால் நியமிக்கப்பட்டது இல்லை. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைக் குழுவுக்கும் அப்போதிருந்த அரசாங்கத்தின் உறுப்பினர்களை தவிர எதிர்த் தரப்பிலுள்ள எவரும் நியமிக்கப்படவில்லை. அவ்வாறிருந்து இந்த குழு தொடர்பில் அவர்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்களையும் உறுப்பினர்களாக நியமித்துள்ள போதும் இந்த கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றவில்லை.

எனவே, அவர்களின் நிலைப்பாட்டை மக்கள் மீது திணிக்கவே முயற்சிக்கிறார்கள். அவர்களின் இந்த நோக்கத்தை இந்த குழுவினூடான நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதாலேயே இதிலிருந்து நீங்கியிருக்கிறார்கள் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

இந்தக் குழு மிகவும் சுயாதீனமாகவும் மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் வகையிலும் செயற்படும். அதற்கமைய, நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொண்டு சரியான முறையொன்றைதிட்டமிட்டு பிரதானமாக மூன்று காரணங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு எதிர்பார்த்திருக்கிறோம். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி நியமிக்கப்பட்ட நாள் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தாக்கம் செலுத்தியுள்ள விதம், இதற்கு முன் இருந்த அரசாங்கங்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தாக்கம் செலுத்திய விதம் மற்றும் உலகளாவிய ரீதியில் தாக்கம் செலுத்திய விதம் என்பவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறோம். அடுத்த வாரம் மீண்டும் இந்த குழு கூடும். பாராளுமன்ற குழுவொன்றில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் குழு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். உண்மையை வெளிக்கொண்டுவருவதற்கு பதிலாக அவர்களின் வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள்.

எனக்கு அரசியல் அனுபவம் இல்லை என்பதும் அரசியல் கட்சியொன்றின் செயலாளராக இருக்கிறேன் என்பதுமே அவர்கள் என்மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளாகும். இவ்விரு காரணங்கள் இரண்டும் உண்மை. ஆனால், இதுபோன்ற குழுவுக்கு அரசியல் அனுபவம் அவசியமில்லை. சட்டத்தரணி என்ற அடிப்படையில் எனக்கு தேவையான அளவு அனுபவம் இருக்கிறது. இந்த பாராளுமன்றத்தில் அனைவரும் அரசியல் அனுபவம் கொண்ட பிரதிநிதிகள் இல்லை. என்மீதான குற்றச்சாட்டுகளினால் இந்த குழுவுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றார்.

## வடக்கில் அதிகரித்துள்ள...

யாழ்ப்பாணம் அல்லது வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை மூளை சம்பந்தமாக ஏற்படும் மூன்று நோய்கள் பற்றி நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

குறிப்பாக, பக்கவாதம் என்பது பொதுவாக மக்களிடையே காணப்படுகின்றது. நடுத்தர அல்லது வயது கூடியவர்களிடம் காணப்படுகின்ற ஒரு பொதுவான நோயாக காணப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு நாளைக்கு ஆறு தொடக்கம் ஏழு நோயாளர்கள் சிகிச்சைக்காக அழைத்து வரப்படுகிறார்கள்.

அதேபோல வீதி விபத்துகளில் மூளை சிதைவுகள் மற்றும் ஏனைய காரணங்களினால் இறப்பு கூட ஏற்படுகின்றது. வீதி விபத்துகளினால் இள வயதினர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள்.

தொற்றா நோய்களில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு உயர் குருதி அழுத்தம் இருக்கின்றது என்பதை அறிந்தால் அவர் அவருடைய வாழ்நாள் பூராகவும் அதன் தாக்கம் உடம்பில் இருப்பது என்பதுதான் அர்த்தம். ஆகவே, அவர் குறிப்பிடப்பட்ட அந்த மருத்தினை உட்கொள்வதுடன் குறைந்தது மூன்று தொடக்கம் 6 மாத இடைவெளியில் வைத்தியரை நாடி அவருடைய பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்குரிய மாத்திரைகளை எடுப்பதன் மூலம் வரும் நரம்பியல் நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. தற்பொழுது வடக்கில் மதுபான பாவனை அதிகரித்துள்ளதன் காரணமாகவே நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன.

இதனால் இன்சுலின் உற்பத்தி தடைப்படுகின்றது. மதுபாவனையை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல போதைப்பொருள் பாவனையும் நரம்பியல் சார் நோய்கள் அதிகரிப்புக்கு ஒரு காரணமாக உள்ளது.

குறிப்பாக இளையவர்கள் நரம்பியல் நோய்கள் மற்றும் திடீர் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே, அதிகரித்துள்ள மதுபாவனை, போதைப் பொருள் பாவனையினால் அவர்கள் அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த மதுபாவனையை கட்டுப்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பெருந்தோட்டத் துறைக்கென...

இதன்போது 27/2இன் கீழ் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரங்கத்திடம் கேள்விகளை எழுப்பினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினை, கல்வி, சுகாதாரப் பிரச்சினைகள், பெருந்தோட்டப் பகுதிகளில் மதுபானசாலை திறப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள விவகாரம் உள்ளிட்டவை தொடர்பில் அவர் முக்கிய பல கேள்விகளை எழுப்பினார்.

நிதி அமைச்சு, பெருந்தோட்டத்துறை அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் மேற்படி கேள்விகள் தொடர்புபடுவதால் கல்வி அமைச்சு சார்ந்த விடயங்களுக்கு பதிலளிப்பதாகவும் ஏனைய பிரச்சினைகளுக்கு பிறிதொரு நாளில் துறைசார் அமைச்சர்கள் பதிலளிப்பார்கள் எனவும் சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

அவ்வேளையில் தோட்ட பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றிருந்தாலும், தோட்ட பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட இடம் இன்னும் சட்டப்பூர்வமாக வழங்கப்படவில்லை என வேலுகுமார் எம்.பி. சுட்டிக்காட்டினார். அத்துடன், மத்திய மாகாணத்தில் ஆசிரியர் உதவியாளர்களுக்கு இன்னும் நியமனம் வழங்கப்படாமை தொடர்பிலும் அரசாங்கம் கரிசனை கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன்,

" தோட்டப்பகுதிகளில் பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் பேசுவதற்கு ஒருநாள் தனியான விவாதம் அவசியம். தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இன்று பதில் வழங்காவிட்டாலும், ஒரு நாள் விவாதத்தை தாருங்கள்." - என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண, விவாதத்துக்குரிய சந்தர்ப்பத்தை வழங்க தயார் எனக் குறிப்பிட்டார்.

அது தொடர்பான திகதி நேற்று நிர்ணயிக்கப் படவில்லை. அந்தத் தீர்மானம் சபாநாயகர் தலைமையில் நடைபெறும் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்படும்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்; பிரதமர் மோடியுடன் பேசுவேன்

## கடற்றொழிலாளர் பிரதிநிதிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனாதிபதியுடனான இந்திய விஜயத்தின் போது இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அவர்களின் இழுவை மடித்தொழில் முறை பற்றி இந்தியப் பிரதமர் மற்றும் உயரதிகாரிகளுடன் பிரஸ்தாபித்து உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் நேற்று (19) அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சரிடம், இந்திய இழுவைப் படகுகளால் தமது கடல் வளம், மீன்பிடி உபகரணங்கள் என்பன அழிக்கப் படுவதாகவும் அதனால் தங்களது வாழ்வதாரம் பாதிக்கப்படுவதாகவும் அதனால் அமைச்சர் ஜனாதிபதியுடன் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது இந்தியப் பிரதமர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளிடம் இப்பிரச்சினை தொடர்பாகப் பேசி இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

அத்துடன், கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்ததுடன் அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதுடன், அவைதொடர்பான கோரிக்கைக் கடிதங்களையும் அமைச்சரிடம் ஒப்படைத்தனர்.

வடபகுதி கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை மிகவும் ஆர்வத்துடன் செவிமடுத்த அமைச்சர்,

வட பகுதி மீனவர்களுக்காகத் தான் கடற்றொழில் அமைச்சராக இருக்கும் காலத்தில் மட்டுமல்லாமல், கடந்த காலங்களிலும் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளதாகவும் எதிர்காலத்திலும் அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்ததுடன், சக தமிழ்த் தரப்புகள் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகப் பேசி வருவதாகவும் ஆனால், வடபகுதி கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் அவர்கள் ஒருபோதும் பேசுவதில்லையெனவும் தெரிவித்தார்.

மேலும், இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக அவர்கள் இந்திய தூதரகத்துடன் பேசலாம் அல்லவா எனவும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், இம்முறை இந்திய விஜயத்தின் போது கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்கும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற தலைவரும் சிறந்த இராஜதந்திரியுமான எமது ஜனதிபதியின் பங்களிப்பும் இவ்விடயத்தில் மிகவும் முக்கிய பங்கு வகிக்குமெனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து இரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் சுசந்த கஹவத்த உள்ளிட்ட அகாரிகள் கலந்துகொண்டனர்.

# 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துக!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அழகிரி



இலங்கையில் 13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். ஆழகிரி வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது அரசியலமைப்புச் சட்டம் பற்றியும் அது ஏற்படுத்தப்பட்டதன் பின்னணி குறித்தும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியிருப்பதாவது,

இலங்கைத் தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்த இன்னலைப் போக்கிட தீவிர முயற்சிகளை மேற்கொண்டவர் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி. பல்வேறு முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பகுதி முழுவதற்கும் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற பெயரில் இலங்கை அரசு பொருளாதாரத்தடை விதித்ததால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழர்கள் கடுமையான பாதிப்புக்குள்ளானார்கள்.

இந்நிலையில், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைப்பதற்காக பிரதமர் ராஜிவ்காந்தி ஆணையிட்டதன் பேரில் ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து உணவுப்பொருட்கள் மற்றும் எரிபொருள் ஏற்றிய 19 படகுகள் 03.06.1987அன்று இலங்கையின் வடக்கு பகுதிக்கு அனுப்பப்பட்டன. ஆனால், நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த படகுகளை இலங்கை அரசின் கடற்படை அனுமதிக்காமல் தடுத்ததால் இந்திய அரசின் படகுகள் ராமேஸ்வரம் நோக்கித் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

பொருளாதாரத் தடையினால் பாதிக்கப்பட்ட அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டுமென்று பிரதமர் ராஜிவ்காந்தி முடிவெடுத்து பெங்களூர் விமானத்தளத்திலிருந்து 5 இந்திய விமானங்கள் மூலம் இலங்கையின் ஆகாயப் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து பரசூட் மூலம் வடக்கு மாகாணத்தில் வாழ்கிற இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்கள் பூமியை நோக்கி கீழே இறக்கப்பட்டன. உண்ண உணவின்றி அல்லலுற்ற அப்பாவித் தமிழர்கள் இந்திய அரசு வழங்கிய உணவுப் பொருட்களைப் பெற்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்.

1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆகாய நடவடிக்கை 'ஒப்பரேஷன் பூமாலை'- என்று அழைக்கப்பட்டது. இந்த நடவடிக்கை அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இனியும் இந்தியாவைப் பகைத்துக் கொள்வது இலங்கை அரசுக்கு நல்லதல்ல என்ற முடிவுக்கு வந்ததனால் உருவானது தான் இந்திய - இலங்கை உடன்பாடு. இந்த உடன்பாட்டில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் 29.07.1987 அன்று கொழும்பு நகரில் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

13 ஆவது திருத்தச்சட்டம்தான் இன்றைய இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாக விளங்கி வருகிறது. ஆனால், அந்தச் சட்டதிருத்தத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு எந்த முயற்சியும் செய்யாமல் அதைச் சீர்குலைக்கிற முயற்சியில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

எனவே, நாளை (21)இந்தியப் பிரதமரை சந்திக்க வருகிற இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் தங்களது உரிமைகளை வலியுறுத்தி பாதுகாப்புத் தரவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியிருக்கிறார். எனவே, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அன்றைய பிரதமர் ராஜிவ்காந்தி இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடி பெறப்பட்ட 13ஆவது சட்டதிருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றார்.

# இழுவைப்படகு மீன்பிடித்தடைச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## அங்கஜன் எம்.பி. வேண்டுகோள்

சாவகச்சேரி நிருபர்



இந்திய அரசாங்கத்துடன் இராஜதந்திரமாகப் பேசி எல்லை தாண்டிய இழுவைப்படகு மீன்பிடிப் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்வுகாண வேண்டும் என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பின்போதே பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேற்கண்ட கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை அதற்கான தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை.

இழுவைப்படகு மீன்பிடித் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதிகாரிகளின் ஒத்துழைப்போடு தொடர்ந்தும் இழுவைப்படகு மீன்பிடி முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி நாளை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி எல்லை தாண்டிய மீன்பிடி மற்றும் இழுவைப்படகு மீன்பிடி ஆகிய சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன், இலங்கையைச் சேர்ந்தவர்களும் அதிகாரிகளின் உதவியோடு இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக வடக்கு மீன்பிடிச் சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 300க்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இவ்விடயத்தில் கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான பணிப்புரையை ஜனாதிபதி விடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 04 ம் நாள்
வியாழக்கிழமை

மேஷம்: உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும்.

ரிஷபம்: குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப் படுத்திக் கொள்ளவும்.

மிதுனம்: உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

கடகம்: குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம்,பொருள் கைமாறும்போது கவனமாக செயற்படவும்.

சிம்மம்: நண்பர்கள் சந்திப்பால் நல்லபலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

கன்னி: செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக்குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

துலாம்: தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல் வாக்குடன் விளங்குவீர்கள்.

விருச்சிகம்: புதிய முயற்சிகளில் வெற்றியும் லாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

தனுசு: திட்டமிட்ட பிரயாணத்தால் ஓரளவு லாபம் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையாகஇருங்கள்.

மகரம்: தொழில்,வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபம் அடைவீர்கள். எதற்கும் பொறுமை இழந்து விடாதீர்கள.

கும்பம்: காதல் திருமணம் கைகூடிவரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிகலாபம் கிடைக்கும்.

மீனம்: நினைத்த காரியத்தில் அதிக முயற்சி இல்லாமலேயே வெற்றி, கடன் நிவர்த்தி, எதிரிகள் கட்டுப்படுவார்கள்.

**திதி** : திருதியை முழுவதும் (தேய்)
**நட்சத்திரம்** : ஆயிலியம் மு.ப.10.55 வரை பின் மகம்
**யோகம்** : அமிர்த யோகம் மு.ப.10.55 வரை பின் மரண யோகம்
**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது.
**நல்லநேரம்** : மு.ப.10.59 - 11.59 மணி வரை
**ராகுகாலம்** : 1.29 - 2.59 மணி வரை
**எமகண்டம்** : 5.59- 7.29 மணி வரை
**குளிகை** : 8.59 - 10.29 மணி வரை
**சந்திராஷ்டமம்:** தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
**தனஅதிஷ்டம்:** பூசம்,அனுஷம், உத்தரட்டாதி, ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்** : ---------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# மலையகத்தில் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு

## கல்வியமைச்சர் சுசில் சபையில் நேற்று அறிவிப்பு

நா. தினுஷா

பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுடம் ஆகிய பாடங்களுக்குத் தேவையான எண்ணிக்கையில் தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் இவ்வருட இறுதிக்குள் பெருந்தோட்டப் பகுதிகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமெனவும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று (20) தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

பெருந்தோட்டங்களிலுள்ள பாடசாலைகளில் 95 சதவீதத்துக்கு அதிகமானவை மாகாண சபைகளினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2005 ஆம் ஆண்டு 3,200 ஆசிரியர்களுக்கு நியமனங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். அதன்போது, ஏனைய பிரதேசங்களிலிருந்தவர்களை நியமிப்பது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. இருந்தபோதும் வழக்குத் தாக்கல் செய்து அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களையே அங்குள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்திருந்தோம்.

மேலும், அங்குள்ள பாடசாலைகளுக்கு ஆய்வுகூடங்களைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தோம். அவற்றை மேலும், மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இந்நிலையில், பெருந்தோட்டங்களிலுள்ள பாடசாலைக் கட்டமைப்புக்குத் தேவையான தமிழ் மொழி மூல ஆசிரியர்களின் எண்ணிக்கையை தேவைக்கேற்றவாறு அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்திருக்கிறேன். கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்ப ரீதியான ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்கவும் அறிவுரை வழங்கியிருக்கிறேன்.

சுற்றறிக்கையின் அடிப்படையிலான குறைந்த எண்ணிக்கையிலான ஆசிரியர்களுள்ள பாடசாலைகளின் விடயங்களை மாவட்ட அடிப்படையில் அறிக்கை கோரியுள்ளேன். இந்த வருட இறுதிக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்றார்.



## அஸ்வெசும பயனாளிகளால் நோர்வூட்டில் பதற்றம்



மனுர சுதத் செல்லஹேவா

நோர்வூட் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மக்கள் அஸ்வெசும நிவாரணத் திட்டத்துக்கான கணக்கைத் திறப்பதற்காகவும் உத்தரவாத கடிதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் திரண்டதால் அங்கு நேற்று (19) பதற்றம் நிலவியது.

நோர்வூட் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பெருந்திரளான மக்கள் திரண்டதுடன் அங்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், மக்கள் வங்கியில் பெரும் எண்ணிக்கையிலானோர் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அகில இலங்கை ஸ்ரீ ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த திருவிழா

கொழும்பு - 15, அழுத்மாவத்தை அகில இலங்கை ஸ்ரீ ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த திருவிழா செவ்வாய்க்கிழமை (25)அதிகாலை 5.45 மணிக்கு மஹாகணபதிஹோமம், அஷ்டாபிஷேகம் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு ஆச்சார்யவர்ணம் கொண்டு கொடியேற்றத்தோடு திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஐந்து நாட்களும் ஆனந்த ஐயப்பனுக்கு கேரளா தர்மசாஸ்தா சன்னிதானத்தில் நடைபெறும் ஆகம விதிமுறைக்கேற்ப விஷேட பூஜைகளோடு, பொண்ணு பதினெட்டாம் படி பூஜைகள் இடம் பெற்று 6ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை (30) காலை கணபதி ஹோமாம், அஷ்டாபிஷேகம், திருபள்ளி எழுச்சி, ஆராட்டை தொடர்ந்து காலை 9.00 மணிக்கு ஆனந்த ஐயப்ப சுவாமி தேரேறிஅழுத் மாவத்தை வீதியோடு முகத்துவாரம் பொலிஸ் நிலைய வழியாக ஸ்ரீ மகா விஷ்ணு கோவிலைச் சென்றடைந்து மட்டக்குளி விஸ்வைக் சுற்று வட்டத்தினூடக மீண்டும் தேர் அழுத்மாவத்தை வழியாக ஆலயத்தை வந்தடையும்.

அன்று பகல் விஷேட பூஜை வழிபாடுகளோடு கொடியிறக்கம், கலசாபிஷேகத்தைத் தொடர்ந்து திருவிழா நிறைவுபெறும்.


## வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 ஜூலை 20ஆம் திகதி, வியாழக்கிழமை


## ரணிலின் பத்தாம்பசலித்தனமான பேச்சும் தமிழர்களுக்கான உப்புச்சப்பற்ற தீர்வும்!

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான சிறந்த யோசனையை தாம் தற்போது முன்வைத்துள்ளதாகவும் அதனை முன்னெடுத்துச் செல்வதா, இல்லையா என்பதைத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் (18.07.2023) பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இதற்கு முன்னர் விருப்பம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த ஜனாதிபதி, தான் ரணில் விக்கிரமசிங்க என்றும் ரணில் ராஜபக்ஷ அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

" பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு இணங்கினால் மாத்திரமே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு தாம் ஒருபோதும் அநீதி இழைக்கப் போவதில்லை. அவர்களுக்காக மேலும் ஏதாவது செய்ய வேண்டுமாயின் கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பாராளுமன்றத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் பொலிஸ் அதிகாரங்கள் தவிர பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து அதிகாரங்களையும் வழங்க முடியும். பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியும்.

இதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை" எனத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில்.

ஜனாதிபதி ரணிலின் இந்தச் சந்திப்பின் காணொளியை நோக்கும்போது, அவரது உடல்மொழியே தமிழர் பிரச்சினையில் அவர் எந்த நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பதைச் சொல்லிவிடுகிறது. இந்தச் சந்திப்பு ஒப்புக்கு சப்பாணி கட்டிய கதை தான். இன்று இந்தியாவுக்கு செல்லும் ரணில், இந்தியா வருமுன்னர் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்துப் பேசியதாக இந்திய சந்திப்புகளில் சொல்லியாகவேண்டிய தேவை ரணிலுக்கு இருக்கிறது. மற்றும்படி இந்தச் சந்திப்பு விசேடமான ஒன்றல்ல.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம் தேவை என்கிறது தமிழ்த்தரப்பு. ஆனால், பொலிஸ் அதிகாரம் வழங்காமல் இதர அதிகாரங்களை வழங்கலாம் என்கிறார் ரணில். ஏலவே கிட்டத்தட்ட சாதாரண மாகாண அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கும் நிலையில், முக்கியமானவற்றைப் பகிரமுடியாது என்று ஒரு பக்கமும் முழுமையான அமுலாக்கத்துக்கு தயார் என்று மறுபக்கமும் கூறி கண்ணாமூச்சி விளையாடுகிறார் விக்கிரமசிங்க.

13 ப்ளஸ் அதாவது, 13 ஆவது திருத்தத்துக்கு மேல் சென்ற அதிகாரங்களை வழங்கத் தயாரென உள்நாட்டுப்போர் முடிந்த கையோடு மன்மோகன் சிங் அரசுக்கு மஹிந்த ராஜபக்ஷ அளித்திருந்த உத்தரவாதம் நிறைவேற்றப்படவில்லை. இப்போது அதே ராஜபக்ஷக்களின் வழி வந்து பதவியில் கோலோச்சும் ரணில், அவர்கள் வேறு நாங்கள் வேறு என்று கூறுவதன்மூலம் மஹிந்தவைப் போலவே தாமும் புளுகு மூட்டையை அவிழ்த்துவிடுவதை மக்கள் உணரமாட்டார்கள் என்று நினைக்கிறார் போலும்.

மன்மோகன் சிங் அரசை ராஜபக்ஷ அரசு ஏமாற்றியது போல, ராஜபக்ஷக்களை நம்பி காங்கிரஸ் ஏமாந்தது போல மோடி அரசுக்கு ராஜபக்ஷ பாணியில் கயிறு கொடுக்க நினைக்கிறார் ரணில். ஆனால், இந்திய மத்தியில் ஆளும் ஜனதாவை அப்படி இலகுவில் ஏமாற்றிவிடமுடியாதென்பது ரணிலுக்குத் தெரியாது போலும். கடந்த காலங்களில் பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்கள் இலங்கை விடயத்தில் கடும்போக்கைக் கொண்டிருந்த வரலாறை ரணில் நன்கு அறிந்திருந்தால் ரணிலின் இந்த அதிகார மமதை இந்தளவுக்கு இருக்காது.

ஜனாதிபதி ரணிலுக்கு தமிழர்கள் சார்பில் கூறவேண்டிய முக்கிய விடயங்கள் உள்ளன. சுருக்கமாகக் கூறப்போனால் ரணில் நினைக்குமளவுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல.அதுதான் தீர்வென சொல்லப்பட்ட காலத்தின் பின்னர் புதிதாக உருவான பல பிரச்சினைகளுக்கு அது தீர்வையும் தராது. ஆனால், அதுதான் ஆகக்குறைந்த நிவாரணம் - குறைந்தபட்சத் தீர்வு. ஆனால், அதனையும் வெட்டிக்குறைத்துத் தருவதுதான் தீர்வென ரணில் கருதுவாராயின் தமிழர் பிரச்சினையின் ஆழம் ரணிலுக்குப் புரியவில்லை என்பதே அர்த்தம்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசியதிலும் ரணில் கையாண்ட சூட்சுமம் இங்கு நோக்கப்படவேண்டும்.இந்தியாவுக்கு வாலையும் சீனாவுக்கு தலையையும் காட்டும் ரணிலின் அமசடக்கு வேலைகள் புதுடில்லிக்கு புரியாததல்ல. இந்தியா சென்று வந்த கையோடு சீனாவுக்கு ரணில் பறக்கவிருப்பதும் இலங்கையில் தாய்வான் முதலீடுகளுக்கு அனுமதி வழங்காமல் சீனாவை ரணில் கொஞ்சிக்கொண்டிருப்பதும் எரிபொருள்துறை உட்பட்ட பல துறைகளில் இந்தியாவுக்குப் போட்டியாக சீனா, அமெரிக்காவை இலங்கைக்குள் ரணில் அழைத்துவந்திருப்பதும் இந்தியாவுக்கு தெரியாததல்ல. அவையெல்லாம் மூடிமறையும் வகையில் இந்தியாவை தாஜா செய்வதற்காகத்தான் அங்கு செல்ல முன்னர் தமிழர் தீர்வு என்ற மேலாடையை அணிய முயல்கிறார் ரணில். இந்தியாவிடம் நல்லபெயர் வாங்குவதற்காக அவர் செய்யும் பாலர் வகுப்பு செயற்பாடு இது.இதுவும் இந்தியாவுக்கு நன்கு தெரியும்.

ஜனாதிபதி ரணில் தமிழ்க் கட்சிகளுடன் நடத்திய பேச்சும் அந்தச் சந்திப்பில் அவரின் அதிகாரப் பேச்சுகளும் பல விடயங்களைச் சுட்டி நிற்கின்றன. ரணிலை ஜனாதிபதித் தேர்தலொன்றின் போது தோற்கடித்த புலிகளின் தீர்மானமும் 13 ஆவது திருத்தம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்ற புலிகளின் நிலைப்பாடும் சரியானவைதான் என்ற எண்ணப்பாட்டை இவ்வளவு காலம் கடந்தும் தமிழர்களிடையே தோற்றுவித்திருக்கிறது. ரணிலின் இந்த உண்மை முகத்தை அடையாளம் கண்டு உரிய அழுத்தத்தை பாரதம் வழங்கவேண்டும். தமிழர்களின் அவாவும் அதுவே.

# சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவை கொண்டாடும் கரவை மக்கள்

**இளையதம்பி இராகவன்**



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவை முன்னிட்டு அவரின் சொந்த ஊரான வடமராட்சி, கரவெட்டியின் மக்கள் சார்பில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் இன்று வியாழக்கிழமை மாலை அங்குள்ள மகேசன் விளையாட்டரங்கில் விழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறது.

அவரின் அரசியல் வாழ்வை விபரிக்கும் தலைவர் சிவா 100 என்ற ஆவண நூலும் இதன்போதுவெளியிடப்படவுள்ளது.

சிவசிதம்பரத்தை சிவா என்றே எல்லோரும் அன்புடன் அழைப்பர். அவர் கரவெட்டியின் அடையாளங்களாக விளங்கிய மகத்தான ஆளுமைகளில் ஒருவர். சிவாவை நினைவு கூருவது என்பது சுமார் அரை நூற்றாண்டு காலமாக தமிழர் அரசியலை ஆகர்சித்திருந்த பெருந்தலைவர்களுள் ஒருவரின் நினைவை மீட்டுவது என்பதற்கு அப்பால் கரவெட்டி மக்களைப் பொறுத்தவரை தங்கள் மத்தியில் வாழ்ந்த ஆளுமையின் நினைவைக் கொண்டாடுவதாக அமைகிறது.

இன்றைய பெரும்பாலான அரசியல்வாதிகளுடன் ஒப்பிடும்போது சிவா போன்று அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் நேர்மையும் கண்ணியமும் கொண்ட தலைவர்கள் எம்மத்தியில் இருந்தார்கள் என்பதை இன்றைய இளம் சந்ததி நம்ப மறுக்கவும் கூடும்.

அரசியலில் கொள்கை வேறுபாடு கொண்டவர்கள் கூட சிவா மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

தனது இளமைக்காலத்தில் கம்யூனிசக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்ட சிவா தமிழ் மக்களுக்கு எதிரான இனரீதியான பாகுபாடுகள் தீவிரமடையத் தொடங்கியதையடுத்து தமிழ்த் தேசியவாத கொள்கைகளை தவிர்க்கமுடியாமல் தழுவிக்கொண்டார். அதற்குப் பிறகு அவர் திரும்பிப்பார்க்கவே இல்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராடடத்துக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவானபோதிலும், சிவா தமிழர்களின் ஐக்கியம் என்று வரும்போது கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. அதை 1961 இலங்கை தமிழரசுக் கட்சி முன்னெடுத்த சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்திலும் அவரின் முழுமையான பங்கேற்பு பறைசாற்றியது. பதவிகளைப் பெறுவதில் சிவா ஒருபோதும் அக்கறை காட்டியதில்லை. அவர் வகித்த பதவிகள் எல்லாமே அவரைத் தேடிவந்தவை. மற்றவர்களுக்கு பதவிகளை விட்டுக்கொடுப்பதென்று வரும்போது அதைச் செய்வதில் முதல் ஆளாக சிவா விளங்கினார். தன்னை முன்னிலைப்படுத்தும் அரசியலையும் சிவா ஒருபோதும் செய்ததில்லை.

ஒரு கட்டத்தில் தமிழ் காங்கிரஸ் மீதான சிவாவின் கட்டுப்பாடு அவரின் கைகளை விட்டுச் செல்கின்ற நிலை ஏற்பட்டபோது கூட அவர் கவலைப்படவில்லை. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை ஐக்கியப்பட்டு முன்னெடுப்பதற்கு அப்பால் தனக்கு வேறு எந்த அரசியல் நலனும் கிடையாது என்பதே சிவாவின் உறுதியான நிலைப்பாடாக இருந்தது. தனது இறுதி மூச்சுவரை அவர் அந்த நிலைப்பாட்டைக் கைவிடவில்லை.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் தமிழர்கள் மத்தியில் ஐக்கியம் முன்னென்றும் இல்லாத அளவுக்கு அவசியப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழ் தேசியவாத அரசியல் சக்திகள் பல்வேறு அணிகளாகச் சிதறுண்டு கிடக்கின்ற கவலைக்குரிய நிலையை பார்க்கின்றபோதுதான் சிவாவின் மேன்மை பிரகாசமாகத் தெரிகிறது.

# இஸ்லாமிய புதுவருடமும் சுய விசாரணையும்

**அபூ சஜாட்**



பரந்து விரிந்த பூமியில் வாழும் வெவ்வேறுபட்ட நாட்டினர், மதத்தினர், இனத்தினர் கால நேரத்தைக் கணக்கிடுவதற்கு வெவ்வேறு முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். சிலர் சூரியனையும் சிலர் சந்திரனையும் அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டு வருகின்றனர்.

உலகில் வாழும் முஸ்லிம்கள் சந்திரனின் சுழற்சியைக் கொண்டே மாதத்தைக் கணக்கிட்டு வருகின்றனர். நபி (ஸல்) அவர்கள் மக்கா நகரை விட்டு மதீனா நகருக்கு (ஹிஜ்ரத்) சென்ற வரலாற்று நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் வருடக் கணக்கு கணிப்பிடப்படுகிறது. இது ஹிஜ்ரி வருடம் என அழைக்கப்படுகிறது.

ஹிஜ்ரி இஸ்லாமிய புது வருடம் முஹர்ரம் மாதத்தின் தலைப் பிறையுடன் பிறக்கிறது. முஹர்ரம் மாதத்தின் முதல் நாள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாவதனால் இலங்கையில் ஹிஜ்ரி 1445 இஸ்லாமிய புது வருடம் இன்று வியாழக்கிழமை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பல்வேறு விடயங்கள் பிறையை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன. பிறையின் முக்கியத்துவம் தொடர்பாக புனித குர்ஆனின் ஸூரா பகராவில் கீழ்வருமாறு தெளிவுபடுத்தப்படுகிறது. "(நபியே) பிறைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள் (அதற்கு) அவை மனிதர்களுக்கும் ஹஜ்ஜு(வணக்கத்து)க்கும் நேரங்களைக் குறிப்பிடுபவை" எனக் கூறுவீராக.

மேலும், "வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் (இருந்து மறுமை நாள் வரை நடந்தேறும் அனைத்து விடயங்களும் எழுதப்பட்ட) அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடத்தில் (ஒரு வருடத்துக்குப்) பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவையாகும்" என அல்குர்ஆனின் ஸூரா தௌபாவில் அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான். அப்புனித மிக்க நான்கு மாதங்கள் துல்கஃதா, ரஜப், துல்ஹஜ், முஹர்ரம் ஆகியவை என நபி (ஸல்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்

(ஆதாரம்: புஹாரி, அஹ்மத்)

இவ்வாறானதொரு நிலையில், நாம் நமது இஸ்லாமிய புதுவருடமான ஹிஜ்ரி 1445ஆம் வருடத்தில் காலடியெடுத்து வைக்கிறோம். ஆனால், நம்மில் பலருக்கு நமது புதுவருடத்தின் முக்கியத்துவம் விளங்காமல் இருப்பது கவலையளிக்கும் விடயமாகும். ஏன் நம்மில் சிலருக்கு இஸ்லாமிய புதுவருடம் எப்போது பிறக்கிறது என்று கூடத் தெரியாதவர்களாகவும் இஸ்லாமிய வருடத்தின் 12 மாதங்களையும் ஒழுங்குமுறையாக சொல்லத் தெரியாதவர்களாகவும் எந்த மாதத்தின் பின்னர் எந்த மாதம் உள்ளது என்பதைக் கூட அறியாதவர்களாகவும் முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு நம்மில் சிலர் உலா வருகிறார்கள். இவ்விடயங்களைப் பொதுத் தளத்தில் பதிவிடுவது பொருத்தமற்றதாக இருந்தாலும் ஒரு விழிப்புணர்வூட்டுவதற்காக சுட்டிக்காட்டுவதில் தவறிருக்காது.

இந்நிலையில், கடந்த வருடத்தில் நாம் என்ன செய்தோம், நமது செயற்பாடுகளும் முயற்சிகளும் இஸ்லாமிய வழிகாட்டலின் பிரகாரம் அமைந்ததா அல்லது அவற்றுக்கு மாறாக இடம்பெற்றதா என்ற சுயவிசாரணை அவசியமாகவுள்ளது. அச் சுயவிசாரணை நமது செயற்பாடுகளை இப்புதிய வருடத்தில் மாற்றத்துக்குள்ளாக்க வேண்டும். நமது சொந்த விடயங்களில் மாத்திரமின்றி சமூகம் சார்ந்த விடயங்கள் மற்றும் சுற்றுச் சூழலில் இடம்பெறுகின்ற விடயங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதற்கான பயன்மிக்க திட்டங்கள் இஸ்லாமிய வரையறை மீறாது முன்னெடுக்க வேண்டிய கடப்பாடும் அவசியமாகும்.

ஏனெனில், அறிவு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் எவையெல்லாம் நவீன கலாசாரமென்று அறிமுகப்படுத்தப்படுகிறதோ அவையெல்லாம் நாகரிகமாக மாறி நாளைய தலைமுறையினரை அழித்துக்கொண்டிருக்கிறது. நவீன கலாசார மோகத்துக்குள் தள்ளப்பட்டுள்ள மாணவ சமூகமும் இளைஞர்,யுவதிகளும் அழிந்துகொள்வதையறியாது அழிந்து கொண்டிருக்கிறார்கள். பேஸ்புக் உட்பட பல சமூக வலைத்தளங்களிலும் தொலைபேசிப் பாவனையிலும் போதைப்பொருள் பாவனையிலும் மூழ்கி தங்களது கால நேரங்களையும் பணத்தையும் வீண் விரையம் செய்து அழிவினதும் ஆபத்தினதும் விளைவுகளை விளங்கிக்கொள்ளாமல் அல்லது விளங்கியும் அவற்றிலிருந்து விடுதலைபெற முடியாமல் தத்தளித்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முஸ்லிம் இளைஞர், யுவதிகளும் விதிவிலக்கல்ல.

இவ்வாறானவர்களை அவர்களின் செயற்பாடுகளிலிருந்து மீட்டெடுப்பதற்கான ஆரோக்கியமான பயன்மிக்க திட்டங்கள் இஸ்லாமிய வரையறையை தாண்டாது வகுக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு இப்புதிய ஹிஜ்ரி ஆண்டில் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த ஆண்டில் பல திட்டங்கள் சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றில் பல திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை என்பதை தொடரும் இவற்றுடன் தொடர்புடைய பல நிகழ்வுகள், சம்பவங்கள் புடம்போடுகின்றன.

அதனால், தனி மனிதனில் மாற்றம் ஏற்படும்போதுதான் சமூகத்தில் மாற்றம் ஏற்படும். சமூகம் மாற்றம் காணும்போது அம்மாற்றம் நாட்டுக்கும் பயன்மிக்கதாக அமையும். அந்தவகையில், பிறந்துள்ள ஹிஜ்ரி 1445ஆம் ஆண்டில் பல மாற்றங்களைக் காண சுயவிசாரணை அவசியமாகிறது. இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு புது வருடமும் பிறக்கும்போது மகிழ்வுறும் நாம் தனது வாழ்நாளில் ஒரு வருடம் குறைந்து விடுகிறது என்பதையும் மறந்து விடுகிறோம். இருப்பினும், பிறந்துள்ள முஹர்ரம் ஹிஜ்ரி 1445ஆம் வருடம் ஆரோக்கியமான மாற்றங்களை நம்மிடையே ஏற்படுத்த நம்மை நாம் சுய விசாரணை செய்ய முயற்சிப்போம்.

## இன்றைய நாளில்...

- 1951 – யோர்தான் மன்னர் முதலாம் அப்துல்லா எருசலேமில் வெள்ளிக்கிழமைத் தொழுகையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1960 – சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராகத் தெரிவானார். இவரே உலகில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பெண் அரசுத்தலைவர் ஆவார்.
- 1969 – அப்பல்லோ திட்டம்: நாசாவின் அப்பல்லோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்றோங், எட்வின் ஆல்ட்ரின் ஆகியோர் முதல் மனிதர்களாக சந்திரனில் காலடி வைத்தனர்.
- 1976 – அமெரிக்காவின் வைக்கிங் 1 விண்கலம் செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.
- 1979 – இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1989 – பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூச்சி இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 1997 – இலங்கையின் மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஈ. எச். மஹ்ரூப் மற்றும் ஐவர் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.
- 2005 – கனடாவில் ஒருபால் திருமணம் சட்டபூர்வமாக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

தமிழருக்கு தீர்வை கொடுக்கோணும் என்று ரணில் உண்மையா நினைச்சிருந்தார் என்றால் கருணாவை பிரிச்சிருப்பாரோ...?



# பலஸ்தீன மக்களுடன் ஒட்டுமொத்த இலங்கையர்களும் ஒன்றுபட்டு நிற்பார்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

பலஸ்தீன மக்களுடன் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்பதை இந்த உயர்ந்த சபையில் மிகத் தெளிவாக அறிவித்துக் கொள்கின்றோம். இந்தக் கொடூரமான கொலைக் கலாசாரத்தை நிறுத்தி, பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து சகோதரத்துவத்துடனும் நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் இப்பிரச்சினையை தீர்க்க இஸ்ரேலை கேட்டுக்கொள்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரினால் முன்மொழியப்பட்ட பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை மீதான பிரேரணை குறித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1948 அரபு-இஸ்ரேல் போர் மற்றும் அதைத் தொடர்ந்த மோதல்களுக்குப் பிறகு, அதாவது 1956 சுயஸ் கால்வாய் மோதல், யோம் கிப்பர் மோதல், 06 நாள் போர், லெபனான் போர் மற்றும் சிரியப் போர் பின்னர் அதிலிருந்து இன்றுவரை பாலஸ்தீன மக்களின் ஜனநாயக உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை என்ற விடயத்தின் அடிப்படையில் மோதல்கள் விரிவடைந்து சென்றுள்ளன.

இந்த இரண்டு தரப்பும் ஒன்றுக்கொன்று இணக்கமாக வாழ வேண்டும் என்று நாம் அனைவரும் நம்புகிறோம். அதுபற்றி எந்த விவாதமும் இல்லை. பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசீர் அராபத் மற்றும் இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபின், ஜனாதிபதி பில் கிளிண்டனின் பேச்சுவார்த்தை ஏற்பாடுகளை உருவாக்கும் பணியின் அடிப்படையில் 1993ஆம் ஆண்டு ஒஸ்லோ ஒப்பந்தம் என்ற வரலாற்று உடன்படிக்கையை எட்டியதை நினைவுகூர்கிறேன். மோதலின் இரு தரப்பினரும் மிகவும் சமநிலையான அணுகுமுறையை எடுத்தனர். பல்வேறு தியாகங்களைச் செய்து, இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கு வேலைத்திட்டமொன்று கலந்துரையாடப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அதற்குப் பின் வந்த காலகட்டத்தில், அரபு நாடுகளில் அமைதியின் விடியலை நாம் காணவில்லை. மோதல்கள் வழக்கமாகிவிட்டது. இது விதிவிலக்கு என்பதை விட வழக்கமாக மாறியது.

நிறவெறிக் கொள்கையை நடைமுறைப்படுத்த எந்த நாட்டுக்கும் உரிமை இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிறவெறிக் குற்றத்தை அடக்குதல் மற்றும் தண்டனை பற்றிய 1973ஆம் ஆண்டு சர்வதேச சமவாயம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான 1998ஆம் ஆண்டு ரோம் சாசனம் இவை அனைத்தும் இனவாத அதிகாரங்கள் நடத்தப்படக்கூடாது என்பதற்கும் அது சட்டவிரோதமானது என்பதற்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

உலகின் முக்கிய வகிபாகங்களை வகிக்கும் தரப்பினரை நோக்கி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். பலஸ்தீன மக்களுக்கும் இஸ்ரேல் மக்களுக்கும் சரியான முடிவுகளை சர்வதேச சமூகத்தின் தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் எடுக்கும்வரை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அமைதியும் நல்லிணக்கமும் பேணப்படுவதை உறுதிப்படுத்தவும் பலஸ்தீனியர்கள் கண்மூடித் தனமாக கொல்லப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தவும் கொலைக்கார ஆட்சிகளினால் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களைத் தடுத்து, அமைதியான மற்றும் இணக்கமான உறவைப் பேணுவதன் மூலம், இந்த இரு தரப்புகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து வாழ வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்ள அனைவரும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதை உறுதி செய்யவும்.



எனவே, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற வகையில் மத்திய கிழக்கில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

# கண்டி மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை

பேருவளை செய்தியாளர்

மின்சார சபையின் அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று (20) வியாழக்கிழமை காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரையான 09 மணித்தியால நீர் விநியோகத் தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கஹவத்த, குருகொட, புளுகஹதென்ன, ஹிராகடுவ, கஹல்ல, தெழும்புகஹவத்த, நுகவெல, பலனகல, அஸ்கிரிய, வேகிரிய, புதிய பல்லேமுல்ல, பழைய பல்லேமுல்ல, யட்டிகல, கொண்டதெனிய, ரஜபிகில்ல, மெதவெல, ஹூலுகம்மன ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும்.



இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# பிள்ளையை பணயம் வைத்து பொலிஸாரை தாக்க முயற்சி

## மதுரங்குளியில் தந்தை கைது

மதுரங்குளி, ஜின்னவத்தை பிரதேசத்தில் ஒருவரை கைது செய்ய பொலிஸார் சென்றபோது, அவர் தனது மூன்று வயதான பிள்ளையை பணயம் வைத்து பொலிஸாரை அச்சுறுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், பிரதேசவாசிகளின் உதவியுடன் பொலிஸார் மிகுந்த பிரயத்தனத்துடன் அவரைக் கைது செய்துள்ளனர். சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் அவரது குழந்தையை தாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி, ஜின்னவத்த கிராமத்தில் பெண் ஒருவரை ஆண் ஒருவர் தாக்குவதாக பொலிஸ் அவசர இலக்கமான 119 ஊடாக மதுரங்குளி பொலிஸாருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை (18) தகவல் கிடைத்தது.

அதன்படி, இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்றபோது, தனது பிள்ளையை பணயமாக வைத்திருந்த சந்தேக நபர், கத்தியால் இரு பொலிஸாரையும் தாக்கியுள்ளார். இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன.

அதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தேக நபரை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பெரும் பிரயத்தனத்தின் பின்னர் கைது செய்துள்ளார்.

# கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் பிரார்த்தனை





அஷ்ரப் ஏ. சமத்

இலங்கை விமானப் படையில் உயிர் நீர்த்தவர்களுக்கான துஆப் பிரார்த்தனை நிகழ்வுகள் நேற்று (19) கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, விமானப்படை அதிகாரிகள், விமானப்படை முஸ்லிம் வீரர்கள், கடந்த கால யுத்தத்தின்போது உயிர்நீத்த விமானப்படை அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்கள், கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை இணைத் தலைவர் முஸ்லிம் சலாகுதீன், செயலாளர் ஹாஜி ஹமீத், ஜம்இய்யதுல் உலமா சபையின் செயலாளர் அஷ்-ஷெய்க் அர்க்கம் நூருல் அமீன், அஷ்-ஷெய்க் பாசில் பாருக், கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் பிரதான இமாம் மௌலவி ஏ.பி.எம். றிஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# இஸ்லாமிய புதுவருடம் இன்று




ஏ.எஸ்.எம்.ஜாவித்

இஸ்லாமிய புது வருடமான ஹிஜ்ரி 1445 புனித முஹர்ரம் மாதத்துக்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் பிறைக்குழு தலைவர் மௌலவி ஹிஸாம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் எப்பாகத்திலும் பிறை தென்படாததால் துல்ஹஜ் மாதத்தை 30 நாட்களாக பூர்த்தி செய்வதாக பிறைக்குழு ஏகமனதாக தீர்மானித்து இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதற்கிணங்க, இன்று வியாழக்கிழமை முஹர்ரம் ஆரம்பமாகின்றது.

இப்பிறை பார்க்கும் மாநாட்டில் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் அங்கத்தவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி, ஏனைய பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள், தரீக்காக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஒருநாள் அடையாள அட்டை சேவை வவுனியாவுக்கு வேண்டும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு கொழும்புக்கு வருகை தரும் வடக்கு மாகாண மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே, சிரமங்களுக்கு தீர்வாக வவுனியாவில் ஒரு நாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் பிரிவு ஒன்றை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆரம்பிப்பாரா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (19) சபை ஒத்திவைப்பு வேளைக்கான கேள்வி நேரத்தின்போது மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். அவர் மேலும் உரையாற்றுகையில், ஒரு நாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 25 சதவீதமானோர் ஆட்பதிவு திணைக்களத்துக்கு வருகை தருகிறார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்து, அதிக பணத்தை செலவழித்து இவர்கள் ஒருநாள் சேவையை பெற்றுக்கொள்கிறார்கள்.

மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நிவர்த்தி செய்ய வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஒருநாள் சேவை வழங்கல் மையத்தை அமைக்க முடியும். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை போல் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களும் பயனடைவார்கள்.

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள கொழும்புக்கு வரும் வடக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை விநியோகப்பிரிவை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பிக்குமா என்றார்.

# உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

வருமானம் குறைந்த மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் நாபீர் பவுண்டேஷனின் செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.



குறித்த வேலைத்திட்டத்தின் ஏழாவது கட்டமாக சம்மாந்துறை பிரதேசத்துக்குட்பட்ட கோரைக் கோவில் முஸ்லிம் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் புதன்கிழமை(19) வழங்கப்பட்டன.

நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகரும் பொறியியலாளருமான உதுமான் கண்டு நாபீர் வழிகாட்டலின் கீழ் சம்மாந்துறை கோரைக் கோவில் மகளிர் அமைப்பின் தலைவி ரஹீமா தலைமையில் உதுமான் கண்டு நாபீரின் பாரியார் எம்.எல்.சனாஸியா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

# அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் நாளை

சாவகச்சேரி, மட்டுவில், அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் மகோற்சவப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவம் இடம்பெறவுள்ளது.

மகோற்சவ பெருவிழாவில் வேட்டைத்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 03 மணிக்கும் சப்பறத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 06 மணிக்கும் தேர்த்திருவிழா 31ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09 மணிக்கும் தீர்த்தத் திருவிழா செவ்வாய்க்கிழமை(01) காலை 09 மணிக்கும் கொடியிறக்கம் மாலை 06 மணிக்கும் பூங்காவனம், திருக்கல்யாணம் புதன்கிழமை(02) மாலை 06 மணிக்கும் பிராயச்சித்தம் வியாழக்கிழமை(03) காலை 09 மணிக்கும் வைரவர் சாந்தி மாலை 05 மணிக்கும் நடைபெறவுள்ளன.

மகோற்சவ குரு சிவஸ்ரீ முத்து பாஸ்கர ரவிக்குருக்கள் தலைமையில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சிதம்பர தியாகராஜக்குருக்கள், ஆலய குரு பிரம்மஸ்ரீ பா.வேதாரணியசர்மா ஆகியோர் கிரியைகளை நடத்திவைப்பர். உற்சவக் காலங்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும்.

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்: இருவர் கைது

யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் இருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கால்பந்தாட்ட போட்டியின்போது இரு குழுவினருக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக திங்கட்கிழமை இரவு இரு குழுவினரும் மோதலில் ஈடுபட்டனர். அதன்போது, வீதிகளில் கண்ணாடி போத்தல்களை உடைத்தும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டு, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதேவேளை, தாக்குதலில் காயமடைந்த நான்கு பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் இருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஊழல் மோசடிக்குள்ளாகியிருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்

மன்னம்பிட்டிய ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளான பஸ்சில் பயணித்தவர்களுள் பிள்ளைகளுடன் பதினொருவர் மரணமானதுடன் 42 பேர் காயங்களுக்குள்ளான சோக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதுபோன்ற பஸ் விபத்துகள் ஏற்கனவே சில ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்விபத்துக்கு பின்பும் இதுவரை ஐந்து பஸ் விபத்துகளும் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளதாகவும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இதுகுறித்து சில விடயங்களை இங்கு குறிப்பிடுவதும் பொருந்தும். இந்த கோர விபத்து சம்பவத்தையடுத்து உரிமம் இல்லாத பஸ்களையும் சாரதிகளையும் கண்டுபிடிக்க போக்குவரத்து ஆணைக்குழு பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதன் பயனாக, உரிமம் அற்ற பஸ்களையும் சாரதிகளையும் கண்டறியக்கூடியதாகவிருந்ததாகவும் அவ்வாறானவர்களுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதில் பணத்துக்காக நீண்டகாலமாக ஊழல்கள் இடம்பெறுவதாகவும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டாலும் இதுவிடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்ததாக அறிவதற்கில்லை. வாகனம் ஓட்டுவதில் சிறந்த அனுபவம் இருப்பவருக்கே(பயிற்சியின்போது) சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதாகத் தெரிவித்தாலும் அறைகுறையாக பயிற்சிபெற்றவர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

அதுமட்டுமன்றி, ரோந்து சேவையிலீடுபடும் சில பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சில இடங்களில் வாகனங்களை இடைமறித்து சோதனை நடத்துகையில் அவ்வாகனங்களில் அல்லது சாரதி அனுமதி பத்திரங்களில் ஏதும் குறைபாடுகளைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவ்வேளை அதனைமூடி மறைக்கும் வகையில் சாரதிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஏதும் 'டிப்ஸ்' கொடுத்துவிட்டு நலுவிச் செல்லும் சம்பவங்களையும் அவ்வப்போது கேள்விப்படத்தான் செய்கிறோம். இவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் பெற்ற சாரதிகள் காலப்போக்கில் தான் ஓட்டிச்செல்லும் வாகனமும் தானும் வாகனத்தில் பயணித்தவர்களும் விபத்துக்குள்ளாக்கும் நிகழ்வுகளையே காணமுடிகிறது. இதனையடுத்து இதுவிடயத்தில் நடவடிக்கையெடுக்க பாதுகாப்புத்துறையினருக்கு ஊக்கம் ஏற்பட்டு காலப்போக்கில் இந்நிலைமை மங்கிப் போகிறது.

அவ்வாறிருக்க, எரிபொருள் விலையேற்றத்தின்போது பஸ் கட்டணங்களை உயர்த்திக்கொள்வதில் பஸ் சங்கங்களும் அவற்றின் தலைவர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதில் ஊக்கமுடன் செயல்படுகின்றனர். எனினும், மேற்குறிப்பிட்ட கோர பஸ் விபத்துகள் பற்றியோ அவ்விபத்துகள் ஏற்படுவதற்கான சாரதிகள் நடத்துநர்களின் முறையற்ற செயற்பாடுகளைக் கண்டித்து இதுபோன்ற விபத்துகள் மேலும் இடம்பெறாதளவுக்கு தக்க நடவடிக்கை எதுவும் எடுப்பது பற்றியோ எடுத்தது பற்றியோ பேசுவதில்லை.

சில பஸ்களில் பணிபுரியும் சாரதிகள் குறிப்பாக நடத்துநர்கள் பயணிகளிடம் நடந்துகொள்ளும் திருப்திகரமற்ற முறைகள் பற்றியும் விமர்சனங்களுமுண்டு. இவைகள் விடயத்திலும் நடவடிக்கையெடுத்ததாக அறிவதற்கில்லை.

பெரும்பாலான பஸ்களின் விபத்துகளுக்குக் காரணம் சாரதிகளின் முறையற்ற போக்குகளே(தூக்கம், மது) என விசாரணைகளின் பின் தெரியவருவதாக பாதுகாப்புப் பிரிவினர் தெரிவிப்பதுமுண்டு.

இச் சந்தர்ப்பத்தில் மன்னம்பிட்டி பஸ் விபத்தை முன்கூட்டியே ஒருவர் தெரிவித்திருந்த வைரலான தகவலையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

மன்னம்பிட்டி குறிப்பிட்ட கோர பஸ் விபத்தை முன்கூட்டியே ஒருவர் 2020.03.06இல் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டு அது வைரலானது பற்றியும் இதனை அத்தருணத்திலேயே சம்பந்தப்பட்டவர்கள் கவனித்திருந்தால் இக்கோர விபத்தைத் தடுத்திருக்கமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜலீல்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.07.18

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**

சீட்டிழுப்பு இலக்கம் 5179

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,273,408.00

ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 2 0 8 2 5 3

**கொவிசெத**

சீட்டிழுப்பு இலக்கம் 3421

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,527,718.00

ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 26 31 32 57

**லக்கி 7 (Lucky 7)**

சீட்டிழுப்பு இலக்கம் 0005

வெற்றி இலக்கினம் தனுசு | வெற்றி இலக்கங்கள் 3 1 0 0 4 0

L7 இலக்கம் 0 3

அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,095,950.24

**தன நிதானய**

சீட்டிழுப்பு இலக்கம் 1209

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,533,703.20

ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 01 09 45 64 | விசேட எழுத்து B

**ராசி சுப பலன் (Handahana)**

சீட்டிழுப்பு இலக்கம் 488

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,530,763.00

வெற்றி இலக்கினம் ரிஷபம் | வெற்றி இலக்கங்கள் 04 06 08 54 | விசேட இலக்கினம் ரிஷபம்

**Mega POWER**

சீட்டிழுப்பு இலக்கம் 1527

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,512,616.00

ஆங்கில எழுத்து J | சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கங்கள் 01 28 38 47

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# செல்வராஜாவின் இரு நூல்கள் வெளியீட்டு விழா யாழில்







யாழ். நிருபர்

இங்கிலாந்தைச் சேர்ந்த நூலியியலாளர் என். செல்வராஜாவின் யாழ்ப்பாணம் பொதுநூலக வரலாறு தொடர்பான பல்வேறு அரிய தகவல்களைக்கொண்ட 'Rising from the Ashes' என்ற ஆங்கில நூலினதும் 'யாழ்ப்பாண பொது நூலகம்' என்கிற தமிழ் நூலினதும் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (18) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பொதுஜன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து யாழ். பொதுஜன நூலகத்தின் பிரதம நூலகரான அனுசியா சிவகரனின் வரவேற்புரை இடம்பெற்றது.

'எங்கட புத்தகங்கள்' நிறுவுனர் குலசிங்கம் வசீகரனின் வெளியீட்டுரையைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

நூல்களின் முதற் பிரதிகளை நூல் ஆசிரியர் என்.செல்வராஜா வெளியிட்டு வைக்க, கல்வியியலாளரும் எழுத்தாளருமான நடராஜா அனந்தராஜ் பெற்றுக்கொண்டார்.

'Rising from the Ashes' நூல் பற்றிய கருத்துரையை கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். பொது நூலகம் குறித்த நூல் தொடர்பான கருத்துரையை சற்குணம் சத்தியதேவன் நிகழ்த்தினார்.

நூலாசிரியர் கௌரவிப்பைத் தொடர்ந்து இரு நூல் ஆசிரியரான என். செல்வராஜாவின் ஏற்புரை இடம்பெற்றது.

யாழ். பொதுஜன நூலகத்தின் உதவி நூலகரான அனிதா தயாளன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# யாழில் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ். நிருபர்

கைகளில் வெட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண, இணுவில் பகுதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான விடுதியின் அருகிலுள்ள காணிக்குள் இருந்தே நேற்று முன்தினம் (18) செவ்வாய்க்கிழமை இரவு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், தாவடி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் பவிசன் (வயது 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் காணப்பட்ட இடத்திற்கு அருகில் தேசிக்காய், பீடி, தீப்பெட்டி, பியர், ஊசி (சிரிஞ்) உள்ளிட்டவை காணப்படுவதால் போதையில் கைகளை தானே வெட்டியதால், இரத்தப்போக்கு காரணமாக உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# கஞ்சாவை திருடி விற்பனைசெய்ய முயன்ற நீதிமன்ற உத்தியோகத்தர் உட்பட இருவர் கைது

மன்னார் நகர் நிருபர்



மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாகக் காணப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்வதற்கு முயன்ற நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரும் விற்பனை முகவரொருவரும் நேற்று (19) புதன்கிழமை காலை மன்னார் நகர்ப்பகுதியில் மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் பணி புரியும் உத்தியோகத்தர் ஒருவர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக வைக்கப்பட்டிருந்த 3 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவைத் திருடி நேற்றுக் காலை விற்பனைக்காக கொண்டுசென்ற நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாகக் காணப்படும் போதைப் பொருட்கள் இவ்வாறு பல வருடங்களாகத் திருடி விற்பனை செய்யப்படுவதாகவும் சான்றுப் பொருளாகக் காணப்படும் ஐஸ் போதைப்பொருளையும் திருடி விற்பனை செய்து அதற்குப் பதிலாக அஜினோமோல்ட் கலந்து வைப்பதாகவும் இன்னும் பலர் இவ்வாறு நீதிமன்ற சான்றுப் பொருட்களான போதைப்பொருள் திருட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் நிலவுகின்றது.

இந்நிலையில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ். மாணவி தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

வட்டுக்கோட்டை நிருபர்



யாழ்ப்பாணம், பாசையூரைச் சேர்ந்த லிசியஸ் மேரி சானுயா (வயது 19) என்ற மாணவி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டார்.

உயிரிழந்த மாணவி சகோதரியின் ஆடையொன்றை அணிந்துள்ளார். இதை குடும்பத்தினர் கண்டித்ததால் கோபமடைந்த மாணவி, கடந்த 12ஆம் திகதி தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டியுள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், கடந்த16ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான இவர் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 8ஏ, பி சித்திபெற்றவர். இவர் உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்று வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு; பெண் படுகாயம்!

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தமேனி பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் (18) இரவு 09. 30 மணியளவில் பெற்றோல் குண்டு வீசியுள்ளதுடன் வீட்டிலிருந்த குடும்பப் பெண் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பெண் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முகங்களை கறுப்புத் துணியால் மூடிக்கட்டியவாறு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 06 பேர் கொண்ட கும்பல் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி வீட்டினுள் சென்று அங்கிருந்த பொருட்களையும் அடித்து நொறுக்கி பெற்றோல் குண்டு வீசியுள்ளனர்.

அதன்போது, வீட்டிலிருந்த மூன்று பிள்ளைகளின் தாயான 42 வயதான பெண்ணொருவரையும் சரமாரியாகத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். சத்தம் கேட்டு கூடிய



அயலவர்கள் காயமடைந்த பெண்ணை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்ததுடன் அச்சுவேலி பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

அதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# அரச போக்குவரத்து பஸ்ஸில் கஞ்சா கடத்தியவர் ஆனையிறவில் கைது!

வட்டுக்கோட்டை நிருபர்

யாழிலிருந்து அக்கரைப்பற்று செல்லும் அரச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் நேற்றிரவு கஞ்சாவை கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 4 கிலோ 160 கிராம் உள்ளடங்கிய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பஸ்ஸில் கஞ்சா கடத்துவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், ஆனையிறவு சோதனைச்சாவடியில் வைத்து பஸ்ஸை சோதனை செய்தபோது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.

அவரை பளை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் அவர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# கொட்டகலையில் இரு வேன்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## வேன் சாரதி தப்பியோட்டம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

கொட்டகலையில் இரண்டு வேன்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவமொன்று நேற்று (19) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக திம்புல- பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஸ்கெலியாவிலிருந்து நானுஓயா நோக்கிப் பயணித்த டொல்பின் ரக வான் ஒன்றும் கொட்டகலையில் இருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற சிறிய ரக வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொட்டகலையிலிருந்து பயணித்த வேன் சறுக்கி எதிர்த்திசையில் பயணித்த டொல்பின் ரக வேனுடன் மோதியுள்ளது.

விபத்தையடுத்து சிறிய ரக வேன் சாரதி வேனை நிறுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லையெனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



முதலாவது ஆடிச் செவ்வாயை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சிவஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது. (படங்கள் :தலவாக்கலை நிருபர்)

# பொலிஸ் பொறுப்பதிகாரியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

ராமு தனராஜா

பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் எதிர்வரும் ஓகஸ்ட் 02 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பசறை பொலிஸ் நிலையத்துக்கு கைதி ஒருவரை பார்வையிடச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் அங்கு வைத்து பொலிஸ் பொறுப்பதிகாரியை தாக்கியுள்ளார். கைதிக்கு கையடக்கத் தொலைபேசியொன்றைக் கொடுக்க குறித்த நபர் முற்பட்டபோது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கையடக்கத் தொலைபேசி கைதிக்கு கொடுக்க முடியாதெனத் தெரிவித்ததால் ஆத்திரமடைந்த இளைஞன் பொறுப்பதிகாரியைத் தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் பசறை, மீரியபெத்த பகுதியைச் சேர்ந்த 23வயதுடையவர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இளைஞன் பசறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே அவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சரணாலயத்தில் மிருகங்களை வேட்டையாடும் கும்பல் இறைச்சி மற்றும் கொம்புகளுடன் கைது!

ஏ.ஏ.எம்.பாயிஸ்

ஹோட்டன் சமவெளிக் காடுகளில் மிருகங்கள் மற்றும் பிராணிகளை வேட்டையாடி அவற்றை அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கும் வியாபாரம் இடம்பெற்று வருவதாக பலாங்கொடை, சமனலவெவ பொலிஸார் நேற்று(19) தெரிவித்தனர்.

சமனலவெவ கலகம பிரதேசத்தில் நேற்று (19) மரை இறைச்சி மற்றும் கொம்புத் தொகுதியுடன் கைதுசெய்யப்பட்ட மூவர் இத்தகவலை உறு திப்படுத்தியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்படி மூவரும் அதிகளவான இறைச்சி மற்றும் மரையின் கொம்புத் தொகுதியுடன் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தியதில் பிரதான சந்தேக நபரான சமாதான நீதவானின் துப்பாக்கி உத்தரவுப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், இத்துப்பாக்கிக்கான அனுமதிப் பத்திரத்தை இவர் பெற்றுள்ளாரா என்பது பற்றி இம்புல்பே பிரதேச செயலாளரிடம் விபரங்கள் பெற்றுக்கொள்ளப்படுமெனவும் இவர்கள் நாளை பலாங்கொடை மாஜிஸ்திரேட் நீதவான முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# காட்டுயானைத் தாக்குதலுக்கு இலக்கான பெண் உயிரிழப்பு

ராமு தனராஜா

மஹியங்கனை ,தெய்கொல்ல பகுதியில் உள்ள வீடொன்றைக் காட்டு யானை தாக்கியதில் வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் 68 வயதுடைய பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் உயிரிழந்த பெண்ணின் 23 வயதுடைய பேத்தி மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இலக்கம் 4 குடகலயாய, தெய்கொல்ல பகுதியிலுள்ள வீட்டையே நேற்று (19) அதிகாலை 4.00 மணியளவில் காட்டு யானை தாக்கியதாகவும் மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேதம் தற்போது மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஹட்டன், செம்புகவத்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வை இங்கு காணலாம். (படங்கள்: கினிகத்தேனை நிருபர்)

# தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

செ.தி.பெருமாள்



நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் நிர்மலாதேவி சுகனேஸ்வரன் தனது 33 வருட கல்விச் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

அப்புத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை அப்புத்தளை லிட்டில்புலவர் கொன்வன்டிலும் இடைநிலைக்கல்வியை பண்டாரவளை சென்மேரிஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை பண்டாரவளை சென்.ஜோசப் கல்லூரியிலும் கற்றார்.

1990 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்ட இவர், நுவரெலியா புனித சர்வேரியார் கல்லூரியில் தனது முதல் நியமனத்தைப் பெற்று அங்கு 2 வருடங்கள் கடமையாற்றியிருந்தார். தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஊடாக தனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த இவர் தொடர்ந்து கந்தப்பளை மெதடிஸ்த கல்லூரி, வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை அக்கரகந்த தமிழ் வித்தியாலயம், லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றார். அங்கு தொடர்ச்சியாக பிரதி அதிபராக சேவையாற்றிய இவர் தனது 60 ஆவது வயதில் கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

இவர் அப்புத்தளையைச் சேர்ந்த முத்துக்கருப்பன் செல்வமணி தம்பதியின் மூன்றாவது புதல்வியாவார். 33 ஆண்டுகால கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இவரை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் ஒன்றியம், உயர்தர மாணவர் குழாம் ஆகியன ஒன்றிணைந்து கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் தெரிவில் தாமதம்

## சதித் திட்டமென கண்காணிப்பாளர்கள் குற்றச்சாட்டு

சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்காமல் காலதாமதம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் கண்காணிப் பாளர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

தேவைக்கேற்ப ஐந்து உறுப்பினர்களை ஆணைக்குழுக்கு நியமிப்பதை விட மூவரில் இருவரிடமிருந்து அனுமதியைப் பெற்று தேர்தல் தொடர்பான முக்கியமான முடிவுகளை எட்டுவது இலகுவானது என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இவ்வாறானதொரு சதி இடம்பெறுவது கவலையளிக்கின்றது எனவும் கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பின்னணியில் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித் துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுக்கு உறுப்பினர்களை நியமிப்பது அரசியலமைப்பு சபையின் பொறுப்பாகும். அதேவேளை, ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஹெட்டியாரச்சி தெரிவித் துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அன்றாட நடவடிக்கைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். விரைவில் அனைத்து உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு க்ரிஷ் கட்டடம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை



நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டுள்ள கொழும்பு க்ரிஷ் கட்டடம் மற்றும் அதனை அண்மித்த பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதால் பாதுகாப்பு ஏற்பாடுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அதன் பொறுப்பு அமைச்சு மற்றும் அரசாங்கத்துக்குக் காணப்படுவதால் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடியது. அதன்போதே அமைச்சர் இந்த ஆலோசனையை வழங்கினார். இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான தேனுக விதானகமகே, அருந்திக்க பர்னாந்து ஆகியோரும் கலந்துகொண்டனர்.

க்ரிஷ் கட்டட நிர்மாணத் தளத்தில் பொருத்தப்பட்டுள்ள நிர்மாண உபகரணங்கள் காற்றுக்கு விழக்கூடிய அபாயம் உள்ளதாகவும் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகக்கூடிய நிலைமை உருவெடுத்துள்ளதாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக, இந்தக் கட்டடத்தின் மூன்று மாடிகள் பூமியின் மட்டத்திலிருந்து கீழே காணப்படுவதால் அதில் மழை நீர் தேங்கி நின்று டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, அதனை அண்மித்திருக்கும் பிரதான சுற்றுலா ஹோட்டல்களிலிருந்து முறைப்பாடுகள் வந்திருப்பதாகவும் அதிகாரில் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, இந்த முதலீட்டாளருடன் கலந்துரையாடி குறிப்பிட்ட காலக்கெடுவொன்றுக்குள் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தவறும் படச்சத்தில் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறும் அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார். நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் முதலீட்டாளருடன் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்கும் மேலதிகமாக உள்ளூராட்சி நிறுவனத்தைத் தொடர்புபடுத்தாமல் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டு கம்பஹா சங்கபோதி கல்லூரிக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் இடையில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த வீடுகளுக்கு பாதை வசதிகள், நீர் வழங்கல், கழிவு முகாமைத்துவம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் முறையாக வழங்கப்படவில்லை என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

விசேட வேலைத்திட்டமாக அனுமதி வழங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் உரிய தரங்களுக்கமைய மேற்கொள்ளப்படவில்லை என்பதால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தத் திட்டம் தொடர்பில் கடந்த மார்ச் மாதத்தில் இடம்பெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலும் கலந்துரையாடப்பட்டிருந்தாலும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் அமைச்சர் அதிருப்தியை வெளியிட்டார். அதற்கமைய, இது தொடர்ப்பில் விரைவாக நடவடிக்கை எடுத்து இரண்டு வாரங்களில் குழுவுக்கு அறிக்கை வழங்குமாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான கோகிலா குணவர்தன, மிலான் ஜயதிலக்க, மதுர விதானகே, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பமாகியது. பல்கலைக்கழக வேந்தர் வாழ் நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான பட்டமளிப்பு விழா 21 ஆம் திகதி வரை 8 அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 278 பேர் பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப்படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர்.பொன்.இராமநாதன் அரங்கேற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும் 10 புலமைப்பரிசில்களும் 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய-இலங்கை கூட்டுக் குழுவின் சந்திப்பு: முக்கிய விடயங்கள் ஆராய்வு

கடல் மார்க்கமான பயணிகள் போக்குவரத்து குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய-இலங்கை கூட்டுக் குழுவின் மெய்நிகர் சந்திப்பு கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழி அமைச்சின் மேலதிக செயலாளர் ஸ்ரீ ராஜேஷ் குமார் சின்ஹா, இலங்கை அரசின் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவச்சந்திர ஆகியோரின் இணைத்தலைமையில் இந்த இருதரப்பு சந்திப்பு நடைபெற்றிருந்தது.

பரஸ்பரம் இணக்கப்பாட்டுடன் அடையாளங் காணப்பட்ட இடங்களிலிருந்து கப்பல் சேவைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. கப்பல் சேவைகளை மீள ஆரம்பிப்பதால் பிராந்திய ரீதியான வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த சேவைகள் மேம்படுத்தப்படுவதுடன் மக்கள் தொடர்புகளும் வலுவடையுமென இருதரப்பினரும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

வெகுவிரைவில் கப்பல் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கான பரஸ்பர ஒத்துழைப்புக்கான பல்வேறு காரணிகளையும் இந்தக் கூட்டுக்குழு அடையாளம் கண்டுள்ள அதே வேளை, பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளது.

2011 இல் கைச்சாத்திடப்பட்ட கடல் மார்க்கமான பயணிகள் போக்குவரத்து குறித்த இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய - இலங்கை அரசாங்கங்களால் இந்தக் கூட்டுக்குழு அண்மையில் மறுசீரமைக்கப்பட்டது.

# அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து எதிர்ப்புப் போராட்டம்

கண்டி நிருபர்

மெல்சிரிபுர பொலிஸாரால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஒருவர் குருநாகல் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் கூரை மேல் ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இச்சம்பவம் 18ஆம் திகதி இடம்பெற்றது.

போதைப்பொருள் விவகாரம் குறித்து சட்டவிரோதமான முறையில் தமக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே அவர் போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார்.



# சிறுவர் பூங்கா காணியை சமுர்த்தி வங்கிக்கு வழங்குவதற்கு முயற்சி

## சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர், உறுப்பினர்கள் எதிர்ப்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி நகரசபையின் கடந்த கால சபைத் தீர்மானங்களுக்கு முரணாக சிறுவர் பூங்காவுக்கென நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள காணியை சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருப்பதுடன் இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சாவகச்சேரி நகரசபை பதவியில் இருந்த காலப்பகுதியில் பலரதும் தீவிர முயற்சியால் சிறுவர் பூங்கா ஒன்றின் அவசியம் கருதி நுணாவில் பகுதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

எமது பிரதேசத்தில் சிறுவர் மற்றும் முதியவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் எவையும் இல்லை. இதனால் சிறுவர்கள் தடம்மாறிச் செல்லும் சந்தர்ப்பங்களும் உளரீதியான பாதிப்புகளுக்கு முகம்கொடுக்கின்ற நிலையும் காணப்படுகின்றன.

மக்கள் வரிப்பணத்தில் சிறுக சிறுக சேமித்த பணத்தில் காணியும் சபை நிதியில் 45இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், சிறுவர் பூங்கா காணிக்கான சுற்று மதில் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. சிறுவர் பூங்கா அமைக்க சமூக சேவகர்கள் மற்றும் புலம்பெயர் தேச உறவுகளும் எமக்கு கை கொடுத்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, சபை இயங்காத தற்போதைய காலப்பகுதியில் சபைத் தீர்மானங்களை மீறி சமுர்த்தி வங்கி கட்டடம் அமைக்க சிறுவர் பூங்கா காணியின் ஒரு பகுதியை வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றமை கவலையளிக்கின்றது.

எமது சபை பதவிக்கு வந்த காலம் தொடக்கம் சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்க நகரசபை காணி வழங்க வேண்டும் என்ற அழுத்தம் மற்றும் கோரிக்கைகள் பல தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வந்தன. நாமும் அவர்களின் கோரிக்கையை ஏற்று சபைக் காணிகள் பலவற்றை வழங்க முன்வந்தோம். ஆனால், சமுர்த்திசார் குழுவினர் நாம் வழங்க முன்வந்த காணிகளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

ஒரு கட்டத்தில் சிறுவர் பூங்காவுக்கென சபை கொள்வனவு செய்த காணியில் ஒரு பகுதியை சமுர்த்திசார் குழுவினர் கோரினார்கள்.

ஆனால், நாம் அப்போதே அவர்களுடைய கோரிக்கையை மறுத்து சிறுவர் பூங்காவின் அவசியத்தையும் சிறுவர் பூங்கா அமைப்பதற்கே மேற்படி காணியின் நிலப்பரப்பு போதாது என்பதனையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இந்நிலையில், தற்போது சபையின் தீர்மானங்களை மீறி காணியை வழங்குவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக தாங்கள் ஆராய்ந்து சிறுவர் பூங்கா காணியை சமுர்த்தி வங்கி அமைக்க வழங்கும் முயற்சியை கைவிடுமாறும் அரச திணைக்களம் ஒன்றுக்கு எம்மால் சிறுக சிறுக சேமித்து கொள்வனவு செய்த காணியை வழங்க முயற்சிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன், சிறுவர் பூங்காவை பூரணப்படுத்த தங்களின் மேலான உதவிகளையும் எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடிதத்தின் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாவட்ட செயலர், தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (18.07.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 213.1364 | 225.1641 |
| கனேடியன் டொலர் | 238.0296 | 251.0639 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.0560 | 46.2346 |
| யூரோ | 353.4656 | 370.8290 |
| ஜப்பான் யென் | 2.2599 | 2.3735 |
| சிங்கப்பூர் டொலர் | 237.0085 | 249.5816 |
| ஸ்ரேலிங் பவுன் | 409.9983 | 429.6656 |
| சுவிஸ் பிராங் | 364.6273 | 386.1715 |
| ஐ.அ. டொலர் | 315.2616 | 328.9299 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 855.5307 |
| குவைட் | குவைட் தினார் | 1,052.2544 |
| ஓமான் | ஓமான் றியால் | 837.7638 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.5284 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.9669 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.8101 |



இஸ்லாமிய புதுவருடம் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் முகமாக அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிற்றுண்டி உபசார நிகழ்வு புதன்கிழமை(19) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் டி.எம்.எம்.அன்சார், உதவிப் பிரதேச செயலாளர் வை.ரிஷித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், கணக்காளர் சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.பாறூக், மேலதிக மாவட்டப் பதிவாளர் சாமில் மௌலானா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தலைமைப்பீட முகாமையாளர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், மகாசங்க உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். **படம்:** திராய்க்கேணி செய்தியாளர்



காத்தான்குடி பிரதேசத்தில் இரத்ததான முகாம்களை சிறப்பாக நடத்தி காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு பங்களிப்புச் செய்த காத்தான்குடி முகநூல் வட்டத்துக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு தள வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை(16) நடைபெற்றது. வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இரத்த வங்கிக்குப் பொறுப்பான டாக்டர் அலிமா றஹ்மான் மற்றும் வைத்தியசாலையின் மோ்டன் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். **படம்:** காத்தான்குடி செய்தியாளர்

# கணக்காளராக அமீர் அலி பதவியேற்பு

நாவிதன்வெளி செய்தியாளர்

கல்முனை பிரதேச செயலக கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவையில் முதலாம் தர உத்தியோகத்தரான சம்மாந்துறையைச் சேர்ந்த கே.எம்.எஸ். அமீர் அலி புதன்கிழமை(19) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சம்மாந்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கை கணக்காளர் சேவையில் 1997ஆம் ஆண்டு உள்ளீர்க்கப்பட்டு கணக்காய்வாளர் திணைக்களத்தில் கணக்காய்வு பரீட்சகராகக் கடமையாற்றினார். பின்னர் 2008ஆம் ஆண்டு தமண பிரதேச செயலகத்தில் கணக்காளராகவும் 2009ஆம் ஆண்டு அம்பாறை கச்சேரியில் கணக்காய்வு அத்தியட்சகராகவும் 2013ஆம் ஆண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கணக்காளராகவும் 2020ஆம் ஆண்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் கணக்காளராகவும் கடமையாற்றியதோடு தற்போது கல்முனை பிரதேச செயலகத்தில் கணக்காளராகக்



கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இக் கடமையேற்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கணக்காளர் யூ.எல் ஜவாஹிர், நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கே.றிஸ்வி யஹ்சர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலீஹ், அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல் யாஸீன் பாவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கணக்காளராக ஜவாஹிர் பதவியேற்பு



நாவிதன்வெளி செய்தியாளர்

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவையில் முதலாம் தர உத்தியோகத்தரான யூ.எல்.ஜாவாஹிர் புதன்கிழமை(19) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

05ஆம் கொலனியைப் பிறப்பிடமாகவும் மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இலங்கை கணக்காளர் சேவையில் 2008 ஆம் ஆண்டு உள்ளீர்க்கப்பட்டு அம்பாறை மாவட்ட செயலகம், இறக்காமம், நாவிதன்வெளி, காரைதீவு பிரதேச செயலகங்களில் கணக்காளராகக் கடமையாற்றியுள்ளார்.

இக் கடமையேற்கும் நிகழ்வில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எவ்.ரகுமான், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கணக்காளர் எம்.ஆர்.நஸீஹா, திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.பாரூக், தர நிர்ணய முகாமைத்துவ வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.ஹரீஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சாய்ந்தமருது நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.ரம்சான், அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல்.யாஸீன் பாவா உட்பட வைத்தியர்கள், தாதிமார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com




அட்டாளைச்சேனை செய்தியாளர்

அட்டாளைச்சேனை கோணாவத்தை பகுதியில் உள்ள வீதிகள் சிலவற்றில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்கள் நீண்ட காலமாக மூடப்படாமல் உள்ளதாகவும் சில வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்களின் மூடிகள் நீண்ட காலமாக சிதைவடைந்து காணப்படுவதாகவும் இதனால், அவ்வீதிகளைப் பயன்படுத்துவதில் பல்வேறு சிரமங்களைத் தாம் எதிர்நோக்கி வருவதாக வும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கோணாவத்தை ஆர்.டி.எஸ். வீதி கொங்றீட் வீதியாக நிர்மாணிக்கப்பட்டபோது அவ்வீதியின் குறுக்காக அமைக்கப்பட்ட வடிகான்களில் பொருத்தப்பட்ட மூடிகள் நீண்ட காலமாக சிதைவடைந்து காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியினால் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு, நாளாந்தம் பல



விபத்துகளும் இவ்வீதியில் இடம்பெற்று வருகின்றன.

அந்நூர் மகா வித்தியாலயம், தள ஆயுர்வேத வைத்தியசாலை, பொது நூலகம், ஜும்ஆ பள்ளிவாசல், சுகாதார வைத்திய சிகிச்சை நிலையம், கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரி காரியாலயம்



போன்றவற்றுக்காக இவ்வீதியின் மூலம் பயணிக்கும் பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், கடற்றொழில் நிமித்தம் நள்ளிரவு வேளைகளில் இவ்வீதியைப் பயன்படுத்தி வரும் மீனவர்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கோணாவத்தை, ஒலுவில், பாலமுனை ஆகிய பிரதேசங்களை ஒன்றிணைக்கும் ஓ.பி.ஏ. வீதிக்கருகில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்கள் நீண்ட காலமாக மூடப்படாமல் காணப்படுவதனால் பல்வேறு விபத்துகள் இடம்பெறுவதோடு, மழை காலங்களில் இவ்வடிகான்களில் நீர் நிரம்புவதனால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுவதுடன், இலை குழை கழிவுப் பொருட்கள் போன்றன நிரம்பி துர்நாற்றமும் வீசி வருகின்றது. குறித்த வீதிகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய துறைசார்ந்தோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு சமாதான நீதவான்கள் ஆதிவாசி தலைவருடன் சந்திப்பு



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையம் சமாதான நீதவான்களுக்கான ஒரு நாள் சுற்றுலாவொன்றை முன்னெடுத்துள்ளது.

மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீனின் வழிகாட்டல்களுக்கமைவாக செயலாளர் துரைராஜா லெட்சுமிகாந்தனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இச்சுற்றுலாவின்போது மகியங்கனை - தம்பான பழங்குடி மக்களான ஆதிவாசிகள் மற்றும் அவர்களது தலைவர் ஊறுவரிகே வன்னில அத்தோ ஆகியோருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது பழங்குடி மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் பிரதிபலிக்கும் நூதனசாலை, சமூகத்தின் மருத்துவம், வணக்க முறை மற்றும் அவர்களது பாரம்பரிய கலாசாரங்கள் என்பவற்றையும் பார்வையிட்டனர்.

# சேதமடைந்து காணப்பட்ட பிரதான பஸ் தரிப்பிடத்தை மாற்றியமைத்த இளைஞர்கள்

## கல்முனையில் மக்கள் பாராட்டு





பாறுக் ஷிஹான்

ஒன்றரை வருடமாக சேதமடைந்து காணப்பட்ட கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியின் பஸ் தரிப்பிடம் கல்முனை இளைஞர்களின் முயற்சியின் பலனாக திருத்தியமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக மீண்டும் வழங்கியுள்ள செயற்பாடு மக்கள் மத்தியில் பாராட்டுப் பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த பஸ் தரிப்பிடம் தொடர்பில் சமூக ஊடகங்களின் வாயிலாக கல்முனை வாழ் இளைஞர்கள் பாவனைக்குதவாத இத்தரிப்பிடத்தை திருத்துவது யார் எனக் குறிப்பிட்டு விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர்.

இக்குறித்த பஸ் தரிப்பிடத்தை அண்மையில் அமைந்துள்ள கல்முனை ஆதார வைத்தியசாலை மற்றும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அரச, தனியார் ஊழியர்கள் பாவித்து வந்திருந்தபோதிலும் தரிப்பிடம் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாமல் உடைந்து காணப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த தரிப்பிடத்தின் நிலைமையை சமூக ஊடகங்களில் கண்டு வெளிநாடுகளில் இருந்த தங்கள் நண்பர்களின் உதவியுடன் அதனைத் திருத்தியமைத்து செவ்வாய்க்கிழமை(18) மக்கள் பாவனைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இதற்காக உதவி செய்த லண்டனில் வசிக்கும் நண்பருக்கும் சகநண்பர்களுக்கும் களத்தில் நின்று அனைத்து வேலைகளையும் செய்து முடித்த ஒவ்வொருவருக்கும் குறித்த செயற்பாட்டுக்கு அனுமதியைப் பெற்றுக்கொடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உதவியாளருக்கும் அதன் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும் கல்முனை இளைஞர்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# சுவாமி விபுலானந்தரின் 76ஆவது சிரார்த்த தினம்







கல்லடி செய்தியாளர்

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் ஏற்பாட்டில் புதன்கிழமை (19) கல்லடியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தர் சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டிருக்க, சுவாமியால் பாடப்பட்ட 'வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ...' என்ற பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பாட, அடிகளாரின் சமாதியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிவானந்தா தேசிய பாடசாலையின் ஏற்பாட்டில் ஸ்தாபகர் தினத்தைக் கொண்டாடும் வகையில் அடிகளாரின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி கல்லடி பழைய கல்முனை வீதியூடாகச் சென்று, கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து, அங்கிருந்து கல்லடி புதிய கல்முனை வீதியூடாக சிவானந்தா வித்தியாலயத்தை அடைந்தது.

இதேவேளை, மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.



இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3வருட காலமாகப் பணிபுரிந்து புத்தளம் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் உதவிப்பணிப்பாளர் சுஜீவ குடவிதானகேவைவுக்கான பிரியாவிடை நிகழ்வும் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது முன்னாள் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் டீ.ஏ.என்.பீரிஸ், வியாபார மேம்படுத்தல் முகாமையாளர் எஸ்.ஹவ்ஸியா மற்றும் உத்தியோகத்தர்களான என்.கோகுலதாஸ், எஸ்.ரஜீவ் சங்கர் எனப் பலரும் கலந்துகொண்டனர். **படம்:** திகாமடுல்ல செய்தியாளர்

# 'அருவியாள் கிராமிய சந்தை' வாகரையில் திறந்து வைப்பு







கல்லடி செய்தியாளர்

வாகரைப் பிரதேச பெண்களின் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும் மீனவப் பெண்களின் சுயதொழில் முயற்சியை வலுப்படுத்தும் முகமாகவும் வாகரைப் பிரதேச பெண்களுக்கென்று பிரத்தியேகமான கிராமியச் சந்தையொன்று அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா சனிக்கிழமை (15) இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சூறாவளித் திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த சந்தைத் தொகுதி வாகரை பிரதேச சபை சந்தைக் கட்டிடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான திருமதி மயூரி ஜனன், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு உத்தியோகத்தர், அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாகரைப் பிரதேச மீனவப் பெண்கள் குழுக்களுக்கான சீர்பாததேவி மீனவப் பெண்கள், வன்னி நாச்சியார் மீனவப் பெண்கள், திமிலர் மீனவப் பெண்கள், செம்படவன் மீனவப் பெண்கள் குழுக்களுக்கான கருவாடு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான பொருட்களும் வழங்கப்பட்டன. இவ் விற்பனை நிலையத்தில் கருவாடு, இளநீர், தேன் மற்றும் உள்ளூர் உணவுகள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கையோ நல்லூர் கந்தனையோ நாங்கள் என்றும் வெறுப்பதில்லை

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்



மட்டக்களப்பு செய்தியாளர்

அடைய முடியாத இலக்குகளுக்காக எம்மை மோத விட்டு அழிய விட்டது மட்டுமில்லாமல், தங்களது செயல்களை இன்னும் நியாயப்படுத்தும் இந்த சித்தாந்தக்காரர்களையே நாம் வெறுக்கிறோமே தவிர நல்லூர் கந்தனையோ வடமாகாண மக்களையோ நாம் என்றும் வெறுப்பதில்லை என இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் திங்கட்கிழமை(17) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை இவர்கள்தான் வரையறுத்தவர்கள். இவர்களது மூதாதையர்கள் போல் பேசுகின்றனர். தங்களது இருப்புக்காகவும் கட்சிக்காகவும் மட்டுமே பேசினார்களே தவிர எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி உண்மையாக நேசிக்கும் மக்கள் நலன் சார்ந்த அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை கருத்தில் கொள்ளாது திட்டமிடப்படாத செயற்பாடுகளே இவர்களின் நடவடிக்கையாகும்.

கிழக்கு மாகாண மக்களின் சவால்களை எதிர்கொள்ள படித்த சமூகத்தின் செயற்பாடு எவ்வளவு முக்கியம் என நாம் அறிந்து கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள எங்களது மக்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் சிந்தனைகளை பாரம்பரிய பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட இந்த மண்ணிலே உற்பத்தித் துறையை கட்டியெழுப்ப வேண்டியதே மிக முக்கியமான வேலையாகும்.

உற்பத்தி செய்யக்கூடிய ஏற்றுமதி பயிர்களையே நாம் பயிரிட வேண்டிய தேவை உள்ளது. பெரியளவு பொருளாதாரத்தை சிந்தித்து சிறியளவு பொருளாதாரத்தை நாம் இழந்து வருவது உண்மையாகும். அடைய முடியாத இலக்குகளுக்காக எம்மை மோத விட்டு அழிய விட்டது மட்டுமில்லாமல், தங்களது செயல்களை இன்னும் நியாயப்படுத்தும் இந்தப் பிழையான வழிப்படுத்தலை தான் நாம் பிழை என சொல்கிறோமே தவிர இறுமாப்புடன் கூடிய சித்தாந்த பிழை என சொல்வார்கள். இந்த சித்தாந்தக்காரர்களையே நாம் வெறுக்கிறோமே தவிர நல்லூர் கந்தனையோ வடமாகாண மக்களையோ நாம் என்றும் வெறுப்பதில்லை என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# அனுமதிப்பத்திரமின்றி பயணிக்கும் பஸ் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி இரவில் பிரயாணிக்கும் பஸ்களை கண்டறியும் விசேட நடவடிக்கையின் கீழ் மட்டக்களப்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் மற்றும் மாவட்டத்துக்குள் நுழையும் பஸ்களை நிறுத்தி சோதனையிடும் நடவடிக்கை ஒன்றை செவ்வாய்க்கிழமை (18) இரவு முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் மா அதிபர் உயத்.என்.பி.லியனகேயின் ஆலோசனைக்கமைய மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சரத் சந்திரா தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸ் குழுவினர் சம்பவதினம் இரவு மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள பிள்ளையாரடி பகுதி வீதியில் மட்டக்களப்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கு போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து பஸ்களை நிறுத்தி சோதனையில் ஈடுபட்டனர்.

இரவு 08 மணிக்கு ஆரம்பித்த இந்த விசேட சோதனை நடவடிக்கையை இரவு 11 மணிவரை முன்னெடுத்தனர்.

இதன்போது போக்குவரத்து அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட போக்குவரத்து சேவைக்கான அனைத்து அனுமதிப் பத்திரங்களையும் சோதனையிட்டு பதிவேட்டில் பதிந்ததுடன் வீதிப் போக்குவரத்தை மீறி பிரயாணித்த பஸ்களை எச்சரித்து அனுப்பப்பட்டனர். மேலும், எந்தவிதமான ஆவணங்களும் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனை, நிந்தவூர், களுவாஞ்சிக்குடி, கத்தான்குடி உட்பட பல பிரதேசங்களிலிருந்து போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கு இரவு வேளைகளில் போக்குவரத்து சேவையில் சுமார் 11 பஸ்கள் ஈடுபடுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இந்த சட்டவிரோத போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களைக் கண்டறிந்து அவற்றைக் கைப்பற்றி நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்காக இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து இரவு வேளைகளில் இடம்பெறும் எனவும் மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காமாட்சி அம்மன் ஆடிப்பூர விழா

ஆரையம்பதி செய்தியாளர்

மட்டக்களப்பு ஆரையம்பதி மாவிலங்கத்துறை காமாட்சி நகர் தேசத்து அருள்மிகு காமாட்சி அம்மன் ஆலய வருடாந்த ஆடிப்பூர பெருவிழா செவ்வாய்க்கிழமை(18) திருக்கதவு திறத்தல் வைபவத்துடன் மிகவும் கோலாகலமாக ஆரம்பமானது.

தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற ஏழு நாள் உற்சவத்தில் நேற்று புதன்கிழமை(19) தவக்கோலச் சடங்கு இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து இன்று வியாழக்கிழமை(20) கல்யாணச் சடங்கும் வெள்ளிக்கிழமை(21) ஆஞ்சநேயர் சடங்கும் சனிக்கிழமை(22) ஆடிப்பூர ஊர்வலமும் ஞாயிற்றுக்கிழமை(23) தேசத்து பள்ளயச் சடங்கும் தீர்த்தோற்சவமும் இடம்பெற்று உற்சவம் நிறைவுபெறும்.



காரைதீவு 03, 04, 08ஆம் பிரிவுகள் மற்றும் மாவடிப்பள்ளி கிழக்கு, மேற்கு ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட 27 காணி உரிமையாளர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், காணி உத்தியோகத்தர் ஆர்.றமேஸ் மற்றும் காணிப்பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர். **படம்:** *மாவடிப்பள்ளி செய்தியாளர்*

# பள்ளிவாசல் அறைகள் உடைத்து திருட்டு

மீராவோடை செய்தியாளர்

பள்ளிவாசல் அறைகளை உடைத்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ள சம்பவமொன்று வியாழக்கிழமை(13) இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் திருகோணமலை டைக் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் தங்கியிருந்த மூன்று அறைகளை உடைத்து அங்கிருந்த ஆடைகள், ஒரு தொகை பணம், தலைக்கவசங்கள் உட்பட பல பொருட்களை சிறுவன் ஒருவனுடன் சேர்ந்து நபரொருவர் திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், திருடனைக் கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைச்சேனை தனியார் வாகனத் தரிப்பிடத்தில் தீ

## 40க்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு சேதம்





வாழைச்சேனை மேலதிக, மீராவோடை, கல்குடா செய்தியாளர்கள்

வாழைச்சேனை கறுவாக்கேணி வீதியில் அமைந்துள்ள தனியார் வாகனத் தரிப்பிடமொன்றில் செவ்வாய்க்கிழமை(18) ஏற்பட்ட தீப் பரவல் சம்பவமொன்றின்போது மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டி உட்பட 40இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது முச்சக்கரவண்டி-1, மோட்டார் சைக்கிள் -34, துவிச்சக்கரவண்டி -8 என 40க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகனங்களில் தீ பரவியதால் வெடிச்சத்தம் கேட்டதுடன் புகையுடன் கூடிய இருள் சூழ்ந்த நிலையில் தீப்பரவல் பிரதேசமெங்கும் பரவியது. பொதுமக்கள் சிலர் அச்சமடைந்து தூர இடங்களுக்கு ஓடியதுடன் பின்னர் நிலைவரம் அறிந்து பொதுமக்கள் தீயணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பணியாற்றும் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் பணியாளர்கள், மாணவர்கள் குறித்த இடத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு பஸ்ஸில் பயணங்களை மேற்கொள்வது வழக்கமாகும். திடீரென ஏற்பட்ட இந்தத் தீப்பரவல் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள்கள் தீயில் அகப்பட்டு சாம்பலாகியுள்ளதாக பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர். வாகனங்களின் உரிமையாளர்கள் தங்களது வாகனங்களை அடையாளம் கண்டு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் திருமதி ஜெயானந்தி திருச்செல்வம், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கங்காதரன் மற்றும் கிராமசேவகர் அ.பிரபு ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகைதந்து நிலைமைகளை அவதானித்தனர். மின்சார சபையினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மின்சார ஒழுக்கினால் ஏற்பட்ட தீப் பரவலா என ஆய்வு செய்ததுடன் சம்பவ இடத்தில் பாதுகாப்புக் கருதி மின் துண்டிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போழியார் புலம்பல்!



*ரணில் எதையும் புடுங்கள்ள என்று முந்தநாள் அமரிக்க தூதுவரோர நடந்த சந்திப்புல தமிழ்த் தேசியக் கட்சி தலைவர்கள் சொல்லிப்போட்டாங்க எலுவா.? நல்லாட்சி காலத்தில எல்லாம் புடுங்குவாரு எண்டுதானே வாய் கிழிய புகழ்ந்தவங்களும் இந்த சந்திப்புல போனவங்க எலுவா..? இப்ப என்னடா எண்டா நரில் குழிபறிக்குது எண்டத அச்சொட்டா அமரிக்கா தூதுவரிட்ட சொன்னதப்பார்த்தா அந்த 13ஆம் வாய்பாடும் இனி பாடம் வராதோ?*

# மட்டக்களப்பில் செயற்கை கருத்தரிப்பு நிலையம் திறப்பு

கல்லடி, சீலாமுனை செய்தியாளர்கள்



தமது தேவைக்காக இதுவரை காலமும் கொழும்பு மற்றும் இந்தியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கிழக்கு மாகாண மக்களின் நன்மை கருதி செயற்கைமுறைக் கருத்தரிப்பு மையம் செவ்வாய்க்கிழமை (18) மட்டக்களப்பு ஈ.எம்.எஸ்.வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

ஈ.எம்.எஸ்.வைத்தியசாலையின் தலைவர் மகிந்தன் இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் ஷியாஹுல் ஹாக், நோர்வேயின் பிரபல வைத்தியரும் ஈ.எம்.எஸ்.வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான டாக்டர் ஜோன்பிள்ளை உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண மக்களின் நன்மை கருதி நவீன வசதிகளுடனும் பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழும் இந்தக் கருத்தரிப்பு மையம் உருவாக்கப்பட்டு அதன் சேவைகள் வழங்கப்படுகின்றன. பொதுமக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அதிகளவான பணத்தை செலவிடுவதை தவிர்த்து, குறுகிய காலத்துக்குள் சிறந்த சேவையை இங்கு பெற்றுக் கொள்ள முடியும் என இதன்போதுதெரிவிக்கப்பட்டது.

# ‘சூழலை பாதுகாத்தல்’ எனும் தொனிப்பொருளில் செயலமர்வு

ஆரையம்பதி செய்தியாளர்

‘சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்’ எனும் தொனிப்பொருளில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தல் எனும் விசேட செயற்றிட்டம் ஒன்றை மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிப சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையில், பொலித்தீன் பாவனையினால் விளையும் தீங்குகள் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்ட அந்நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் ஓரங்கமாக மண்முனைப்பற்று ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 23, 24 ஆகிய இரு தினங்களில் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ நிறுவன பொதுச் செயலாளர் பற்றிக், கள உத்தியோகத்தர் எஸ்.மணிமாலதி, மேற்படி பாடசாலை அதிபர் என்.நந்தகோபால், பயிற்றுவிப்பாளர்கள் உட்பட ஆரையம்பதி மகா வித்தியாலயம், மட் / ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், காங்கேயனோடை அல்-அக்ஷா வித்தியாலயம், காத்தான்குடி கிழுறியா வித்தியாலயம், காத்தான்குடி அல்-ஹரா மற்றும் பூனொச்சிமுனை இக்ரா ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 60 மாணவ மாணவிகள் இச்செயலமர்வில் கலந்து கொள்வர்.

# உயர் கலப்பின சோளம் மட்டக்களப்பில் அறுவடை



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் உயர் கலப்பின சோளம் அறுவடையானது பிரதி விவசாய விரிவாக்கல் பிரிவின் பணிப்பாளர் கே.பேரின்பராசா தலைமையில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முல்லாமுனை பகுதியில் செவ்வாய்க்கிழமை(18) இடம்பெற்றது.

இலங்கையில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட உயர் கலப்பின சோள வகையான MI MAIZE HY - 5 பரீட்சார்த்தமாக மட்டக்களப்பு கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் பயிரிடப்பட்டதுடன், இச்சோளப் பயிரானது சிறந்த விளைச்சலைத் தந்துள்ளது.

இதன்போது உதவி விவசாயப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, விவசாய போதனாசிரியர்கள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள், சேனைப் பயிர்ச்செய்கையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வெளிநாடு அனுப்புவதாக கூறி 28 இலட்சம் ரூபா பணம் மோசடி

## போலி முகவர்கள் இருவர் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் கனடா மற்றும் ஓமான் நாட்டுக்கு அனுப்புவதாகத்தெரிவித்து இருவரிடம் 28 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு மோசடியில் ஈடுபட்ட கொழும்பு மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த இரு போலி முகவர்களை திங்கட்கிழமை (17) கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

கனடாவுக்கு அனுப்புவதாக கொழும்பிலுள்ள போலி முகவர் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு அவரை கடந்த 06 மாதகாலமாக ஏமாற்றி மோசடி செய்து வந்த நிலையில், அந்தப் போலி முகவருக்கு எதிராக விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்ததையடுத்தே குறித்த போலி முகவரை கொழும்பில் வைத்து கைது செய்தனர்.

அதேவேளை, ஓமான் நாட்டில் வேலை பெற்றுத் தருவதாக ஒருவரிடம் சின்ன ஊறணியைச் சேர்ந்த போலி முகவர் ஒருவர் 13 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு ஏமாற்றி வந்த நிலையில், பாதிக்கப்பட்டவர் செய்த முறைப்பாட்டுக்கமைய போலி முகவரைக் கைதுசெய்தனர்.

இந்த இரு வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது இருவரும் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பதாகத் தெரிவித்த நிலையில் அவர்களை தலா ஒருவருக்கு இரு ஆள் நிபந்தனை பிணையில் நீதவான் விடுவித்துள்ளார்.

# உணவகங்கள் மீதான பரிசோதனையில் பல நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

வாழைச்சேனை, மீராவோடை செய்தியாளர்கள்



மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் வழிகாட்டலில் உணவகங்கள் பரிசோதனை இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில், வாழைச்சேனை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, ஓட்டமாவடி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கோறளைப்பற்று மத்தி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவற்றில் காணப்படும் உணவகங்களில் உணவு கையாளும் முறைகள் தொடர்பில் பரிசோதனைகள் இடம்பெற்றன.

குறித்த பிரிவிலான பரிசோதனையின்போது 05 வியாபார நிலையங்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 13 வியாபார நிலையங்களை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் கடைகளை திருத்தம் செய்யுமாறு பணிப்புரையும் வழங்கப்பட்டது.

மேலும், கடைகளில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் துப்புரவு இன்மை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டு கால அவகாசம் வழங்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், பாவனைக்குதவாத உணவுகள் அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டன.

# அவுஸ்திரேலியா கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப்பொருள்

## 'சந்திரயான்-3' இன் பாகமா? மாயமான மலேஷிய விமான பாகமா?



அவுஸ்திரேலிய கடற்கரையில் நேற்றுமுன்தினம் மர்மப்பொருளொன்று கரையொதுங்கியுள்ளது. அது இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் பாகமாக இருக்கக்கூடுமோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் மேற்கில் ஜீரியன் விரிகுடா கடற்கரையில் சுமார் 2 மீற்றர் உயரம், 2 மீற்றர் அகலமுடைய பெரியளவிலான உலோகப் பொருளின் பாகம் கரை ஒதுங்கியுள்ளது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அபாயகரமான அந்த பொருளிலிருந்து விலகி இருக்கும்படி பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து அவுஸ்திரேலிய விண்வெளி நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

''கரையொதுங்கிய மர்மப்பொருள் தொடர்பாக விசாரித்து வருகிறோம். இது ஒரு வெளிநாட்டு ரொக்கெட்டிலிருந்து பிரிந்த பாகமாக இருக்கலாம். அதன் தோற்றம் தெரியாததால் அதை கையாளவோ அல்லது நகர்த்தவோ மக்கள் முயற்சிக்கக் கூடாது" என்று தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய விண்வெளி நிறுவனத்திடமிருந்து இது தொடர்பாக கடிதம் வந்திருப்பதை இஸ்ரோ உறுதிபடுத்தியுள்ளது. இது சமீபத்தில் இந்தியா ஏவிய சந்திரயான்-3 விண்கல ரொக்கெட்டின் பாகம் அல்லது பறக்கும் தட்டிலிருந்து பிரிந்த பாகம் அல்லது காணாமல்போன மலேஷிய விமானத்தின் பாகமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்த முடிவுகள் தெரியும்வரை இது போன்ற ஊகங்களை தவிர்க்கும்படி பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அகதிகள் தங்குமிடமாக மாறிய கப்பல்



பிரித்தானியாவில் புகலிடம் தேடி வரும் அகதிகளை தங்க வைப்பதற்காக கைவிடப்பட்ட கப்பலொன்று தங்குமிடமாக மாற்றப்பட்டுள்ளது.

பிரித்தானியாவுக்கு செல்லும் அகதிகளின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்வரை அவர்கள் தற்காலிகமாக ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டு வந்தனர்.

அதற்கான செலவை குறைக்கும் வகையில் பிரித்தானிய அரசு இந்த ஏற்பாட்டை செய்துள்ளது. தங்குமிடமாக மாற்றப்பட்டுள்ள அந்த கப்பல், தற்போது போர்ட்லேண்ட் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதில், 500 ஆண்கள் வரை தங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஏஐ தொழில்நுட்பத்துக்கு ஐ.நா. கடிவாளம்

ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக முதல் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டம் நேற்றுமுன்தினம் (18) நியூயோர்க் நகரில் நடைபெற்றது.

வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உலக பொருளாதாரத்துக்கும் சர்வதேச பாதுகாப்புக்கும் எவ்வாறு பயன்படுத்துவது என்று பல்வேறு உலக நாடுகள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் உலகம் எதிர்கொண்டுள்ள சாதக, பாதகங்கள் தொடர்பான முதல் ஆலோசனை கூட்டம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், உலக அமைதி மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் ஐ.நா.பொதுச் செயலாளர் எண்டனியோ குட்டேரஸ், பிரித்தானிய செயற்கை நுண்ணறிவு நிபுணர் Jack Clark மற்றும் சீனா, பிரித்தானிய ஆராய்ச்சி மையத்தின் இணை இயக்குநர் Zeng Yi உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

செயற்கை நுண்ணறிவு நுட்பத்துக்கு கடிவாளமிட்டு அதனை காலநிலை மாற்றம், பசி, சமூக பாதுகாப்புப் போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண பயன்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர். வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் ஆபத்துகளை எவ்வாறு குறிப்பது என்று உலக நாடுகள் பரிசீலித்து வரும் சூழலில், ஐ.நாவின் இந்த கூட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

முன்னதாக, ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச நலனுக்கான செயற்கை நுண்ணறிவு என்ற உச்சி மாநாட்டில் மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ஹியூமனாய்ட் ரோபோக்கள் இடம் பெற்றிருந்தன.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் நிபுணத்துவம் பெற்ற 3,000 பேர் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் செயற்கை நுண்ணறிவின் சக்தியை கடிவாளமிட்டு அதனை காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்தனர்.

இந்நிலையில், மாநாட்டின் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு கொண்ட ஹியூம னாய்ட் சோசியல் ரோபோக்களின் முதல் ஊடகவியலாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அச்சந்திப்பில், ''எங்களால் இந்த உலகத்தை மனிதர்களைவிட சிறப்பாக வழிநடத்த இயலும் என்று உறுதியளித்தன. அதேவேளையில் எங்களுக்கு மனிதர்களின் உணர்வுகள் குறித்து இன்னும் பிடிமானம் ஏற்படவில்லை" என்றும் ஒப்புக்கொண்டன.

# பென்டகனை மிஞ்சியது குஜராத் வைர வர்த்தக மையம்



அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அலுவலகமான பென்டகன், உலகின் மிகப் பெரிய அலுவலகமாக திகழ்ந்து வருகிறது. இந்நிலையில், பென்டகனைவிட பெரிய அலுவலகக் கட்டடமொன்று இந்தியாவில் விரைவில் திறக்கப்படவுள்ளது.

குஜராத்தில் சூரத் மாவட்டத்தில் வைர வர்த்தக மையம் கட்டப்பட்டுள்ளது. 35 ஏக்கரில் 09 செவ்வக வடிவ அமைப்புகளாக இது கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 15 மாடிகளைக் கொண்டுள்ளன.

வைரத் தொழிலின் தலைநகரமாக சூரத் விளங்குகிறது. இந்நிலையில், வைரத்தை வெட்டுதல், பட்டை தீட்டுதல், அதை விற்பனை செய்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மொத்தம் 4,200 அலுவலகங்கள் இந்தக் கட்டிடத்தில் செயற்பட முடியும். வைரம் தொடர்பான தொழிலில் ஈடுபடும் 65,000 பேர் பணியாற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டடத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.



**உலகிலேயே மிகப்பெரிய பாறை அவுஸ்திரேலியாவில் உள்ளது. 'உலுறு' என்ற இப்பிரமாண்ட பாறை 114 மாடிக் கட்டடத்தை விடவும் உயரமானது.**

# உலக செய்திகள்

## உலகின் மிக சக்திவாய்ந்த பாஸ்போர்ட்; முதலிடத்தில் சிங்கப்பூர்

உலகின் மிகவும் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் என்ற பெருமையை சிங்கப்பூர் பெற்றுள்ளது.

லண்டனை தலைமையிடமாகக் கொண்ட ஹென்லி அன் பார்ட்னர்ஸ் என்ற குடியேற்றம் தொடர்பான ஆலோசனை நிறுவனம், சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் தரவுகளின் அடிப்படையில், உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.



அந்த வகையில், இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள பட்டியலில், கடந்த 05 ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தில் இருந்துவந்த ஜப்பானை பின்னுக்குத் தள்ளி சிங்கப்பூர் முதலிடம் பிடித்துள்ளது. உலகம் முழுவதிலுமுள்ள 227 பயண இடங்களில் 192 இடங்களுக்கு விசா இல்லாமல் பயணிக்கும் அனுமதியை சிங்கப்பூர் பாஸ்போர்ட் பெற்றுள்ளது.

ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகியவை 2ஆம் இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளன. ஜப்பான் 3ஆம் இடத்தை பிடித்துள்ளது. 4ஆம் இடத்தில் பிரித்தானியாவும் 8ஆம் இடத்தில் அமெரிக்காவும் உள்ளன.

# விளையாட்டுத் துளிகள்

**★ மணிக்கு 565 கிலோ மீற்றர் வேகத்தில் பந்தை அடித்து 10 வருடங்களுக்குப் பிறகு கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார் இந்திய பேட்மிண்டன் நட்சத்திர வீரர் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி. இதற்கு முன்னர் கடந்த 2013ஆம் ஆண்டு மலேசியாவை சேர்ந்த பூன ஹியோங் மணிக்கு 493 கிலோ மீற்றர் வேகத்தில் பந்தை அடித்தது உலக சாதனையாக இருந்தது. மகளிர் பிரிவில் மலேசியாவின் டான் பியர்லி மணிக்கு 438 கிலோ மீற்றர் வேகத்தில் பந்தை அடித்து உலக சாதனை புரிந்துள்ளார்.**

**★ ஒக்டோபர் 5ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள 10 அணிகள் பங்கேற்கும் ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடருக்கான 15 பேர் கொண்ட வீரர்களின் பட்டியலை செப்டெம்பர் 05ஆம் திகதிக்குள் அனைத்து அணிகளும் சமர்ப்பிக்க வேண்டும் என ஐ.சி.சி தெரிவித்துள்ளது.**

# பாகிஸ்தானுக்கு வெறும் 131 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்த இலங்கை

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் இன்றைய இறுதி நாளில் பாக். அணியின் வெற்றிக்காக 83 ஓட்டங்கள் தேவைப்படும் நிலையில் இலங்கை அணியின் வெற்றிக்காக 7 விக்கெட்கள் தேவைப்படுகின்றன.



இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. முன்னதாக முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனஞ்ஜய டி சில்வாவின் சதத்துடன் 312 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி சவூத் சக்கிலின் இரட்டை சதத்துடன் 461 ஓட்டங்களை குவித்தது. இலங்கை அணி இன்னும் 149 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி தனஞ்ஜய டி சில்வா மற்றும் நிஷான் மதுஷ்க ஆகியோரின் அரைச்சதத்தின் உதவியுடன் 279 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்க, பாகிஸ்தான் அணியின் வெற்றியிலக்காக வெறும் 131 ஓட்டங்கள் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி நேற்று போட்டியின் 4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 48 ஓட்டங்களை சேர்ந்தது. இன்று போட்டியின் இறுதிநாள் ஆட்டம் தொடரவுள்ள நிலையில் ஆடுகளத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் மற்றும் இமாம் உல் ஹக் ஆகியோர் காணப்படுகின்றனர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கை கிரிக்கெட் நடுவர் தெரிவுப் பரீட்சையில் கல்முனை ஸாஹிரா ஆசிரியர்கள் இருவர் சித்தி

நிந்தவூர் செய்தியாளர்



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட கிரிக்கெட் நடுவர்களுக்கான தெரிவுப் பரீட்சையில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி ஆசிரியர்களான ரீ.எஸ்.அஜ்மல் ஹுசைன் மற்றும் எம்.எப்.எம்.றிஸ்வி ஹாதிம் ஆகியோர் அகில இலங்கை ரீதியில் சித்தியடைந்து கல்லூரிக்கும் பிராந்தியத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இதனடிப்படையில், ரீ.எஸ்.அஜ்மல் ஹுசைன் (89) மற்றும் எம்.எப்.எம்.றிஸ்வி ஹாதிம் (88.5) புள்ளிகளை பெற்று அகில இலங்கை ரீதியில் முறையே 8ஆம், 9ஆம் இடங்களை பெற்று சாதனை புரிந்துள்ளனர்.



**மொனறாகலை மாவட்ட 14 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற சமபோஸ உதைப்பந்தாட்ட போட்டிகளில் மொ/பக்கினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி சம்பியனானது. ஆசிரிய ஆலோசகர் எச்.எம்.எம்.மத்தும பண்டார, விளையாட்டு ஆசிரியர்களான எம்.யூ.சிபாட், கசுன் ஆகியோருடன் மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.**

**படம்:** எம்.ஏ.எம்.ஹசனார்

# அபார வெற்றியுடன் அரையிறுதிக்குள் நுழைந்த இலங்கை



ஆசிய கிரிக்கெட் பேரவையின் ஏற்பாட்டில் இலங்கையில் நடைபெற்றுவரும் வளர்ந்துவரும் அணிகளுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்கு இலங்கை அணி தகுதிபெற்றுள்ளது.

ஓமான் ஏ அணிக்கு எதிராக கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை ஏ அணி 217 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றதன் அடிப்படையில் குழு ஏ புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து அரையிறுதிக்கு தெரிவானது.

ஆப்கானிஸ்தான் அணியை பங்களாதேஷ் அணி வீழ்த்தியதால் தங்களுடைய அரையிறுதி வாய்ப்பை தக்கவைப்பதற்கு இலங்கை அணிக்கு மிகப்பெரிய வெற்றி தேவைப்பட்ட நிலையில், 04 புள்ளிகளுடன் 1.693 என்ற ஓட்ட சராசரியை பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பிடித்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

எனினும் முதலிரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று பலமான நிலையில் இருந்த ஆப்கானிஸ்தான் அணி, பங்களாதேஷ் அணிக்கு எதிரான தோல்வியின் காரணமாக அரையிறுதி வாய்ப்பை இழந்து தொடரிலிருந்து வெளியேறியது. வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணி இந்தியா அல்லது பாகிஸ்தான் அணியை எதிர்த்தாடும்.

# பீபா மகளிர் உலகக்கிண்ணம் இன்று ஆரம்பம்

## முதல் முறையாக இரு நாடுகளில்

முதல் முறையாக இரு நாடுகள் (அவுஸ்திரேலியா, நியூசிலாந்து) இணைந்து நடத்தும் மகளிர் பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடர் இன்று ஆரம்பமாகிறது. இன்று முதல் எதிர்வரும் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை இத்தொடர் நடைபெறவுள்ளது. இந்த உலகக்கிண்ண தொடரில் 32 அணிகள் பங்கேற்கின்றன.

FIFA WOMEN'S WORLD CUP AU NZ 2023

இதில், ஒவ்வொரு குழுவிலும் 04 அணிகள் வீதம் மொத்தம் 08 குழுக்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் அந்தந்த குழுக்களின் மீதமுள்ள அணிகளுடன் தலா ஒவ்வொரு முறையும் மோத வேண்டும். லீக் சுற்றின் முடிவில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள், நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறும். நொக் அவுட் சுற்றில் சுப்பர் 16 சுற்றுகள், காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

மொத்தம் 64 போட்டிகள் ஒரு மாத இடைவெளியில் 10 மைதானங்களில் நடத்தப்பட இருக்கிறது. ஒரு அரையிறுதி போட்டி மட்டும் நியூசிலாந்தில் நடைபெறுகிறது. மற்றொரு அரையிறுதி, 3ஆவது இடத்துக்கான பிளே ஆஃப் மற்றும் இறுதிப்போட்டி ஆகியவை அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

# சம்பியன் பட்டம் வென்ற செட்டிப்பாளையம் நியூட்டன் வி.க



குருக்கள்மடம் நிருபர்

மட்டக்களப்பு செட்டிப்பாளையம் நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்திய 22 வயதுக்குட்பட்டோருக்கான 20 அணிகள் பலப்பரீட்சை நடத்திய அணிக்கு 06 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுத்தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் செட்டிப்பாளையம் நியூட்டன் விளையாட்டுக்கழகம் சம்பியன் பட்டத்தையும் தேற்றாத்தீவு வெற்றிவிநாயகர் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றன. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் ஆட்டநாயகன் விருதை நியூட்டன் விளையாட்டுக் கழகத்தின் சருஜன் பெற்றுக்கொண்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7